# இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டம் தொடர்பான விரைவான குறிப்பு வழிகாட்டி



பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் பாலின ஒப்புறவு மற்றும் சமத்துவம் தொடர்பான பாராளுமன்றத்தின் தெரிவுக் குழு

2021

# இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டம் தொடர்பான விரைவான குறிப்பு வழிகாட்டி

இலங்கையில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமை மீறல்களை ஆராய்வதில் சிறப்புக் கவனம் செலுத்தி பாலின ஒப்புறவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான அதனுடைய பரிந்துரைகளைப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் பாராளுமன்றத்தின் தெரிவுக் குழு (பாலின ஒப்புறவு மற்றும் சமத்துவம் தொடர்பான தெரிவுக் குழு) மற்றும் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் வெளியீடு

2021



**மாண்புமிகு. டாக்டர். சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே அவர்களின் செய்தி** 05
ஆரம்ப சுகாதார சேவை, தொற்று நோய்கள் மற்றும் கோவிட்19 தடுப்புக்கான இராஜாங்க அமைச்சர் மற்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் பாலின ஒப்புறவு மற்றும் சமத்துவத்திற்கான தெரிவுக்குழுவின் தலைவர்

**திருமதி குஷானி ரோஹணதீர அவர்களின் செய்தி** 07
பணியாட்தொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர், இலங்கைப் பாராளுமன்றம்

முன்னுரை 09

அலகு ஒன்று : உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் என்றால் என்ன? 11

அலகு இரண்டு : உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலானது இலங்கைக்கு ஏன் முக்கியமானது? 14

அலகு மூன்று : திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் சுழற்சி மற்றும் இந்த சுழற்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வாக்குச் செலுத்துவதற்கான அவர்களுக்கான நுழைவுப் புள்ளிகள் 18

அலகு நான்கு : பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலின் ஊடாக நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் பாலின சமத்துவத்தை அடைந்து கொள்ளல். 27

அலகு ஐந்து : பாலின சமத்துவத்திற்கான தேசிய கொள்கைக் கட்டமைப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள் 34

இணைப்பு I : இலங்கையில் பாலின நிலை குறித்த புள்ளிவிவரவியல் கண்ணோட்டம் 35

இணைப்பு II : பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய வரவு செலவுத் திட்டத்தில் உள்ள முக்கிய பகுதிகள் (2022 வரவு செலவுத் திட்டத்திற்கான அழைப்பு குறித்து பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் 01/2021 சுற்றுநிருபத்தின் இணைப்பு) 42

இணைப்பு III : தேசிய கொள்கைக் கட்டமைப்பின் பாலினப் பகுப்பாய்வு: நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு 62





## மாண்புமிகு. டாக்டர். சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே அவர்களின் செய்தி

ஆரம்ப சுகாதார சேவை, தொற்று நோய்கள் மற்றும் கோவிட்19 தடுப்புக்கான இராஜாங்க அமைச்சர்
பாலின சமத்துவத்திற்கான தெரிவுக்குழுவின் தலைவர்

இலங்கைப் பாராளுமன்றத்தில் உள்ள எனது சகாக்களுக்கு உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டம் தொடர்பான விரைவான குறிப்பு வழிகாட்டியை வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தக் குறிப்பு வழிகாட்டியானது பாலின சமத்துவத்திற்கான தேர்வுக் குழுவின் வெளியீடு ஆகும். தேசிய வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உள்ளடக்கிய கண்ணோட்டத்தில் தீவிரமாக ஈடுபடுவதற்கும், சமூக உள்ளடக்கம் மற்றும் பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கும் தேவையான மாற்றங்களை முன்மொழிவதற்கும் இவ் வழிகாட்டியானது தகவல் மற்றும் நடைமுறைக் கருவிகளை வழங்குகின்றது.

தெரிவுக்குழு உறுப்பினர்களாகிய நாங்கள், தேசிய வரவு செலவுத் திட்டங்களின் பாலின நடுநிலைமையை சவால் செய்வதற்கும் வரவு செலவுத் திட்டங்கள் சமமானதாகவும், பாலினப் பொறுப்புணர்வைக் கொண்டதாகவும் இருப்பதை உறுதிசெய்ய உறுதிபூண்டுள்ளோம்.

2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வரவு செலவுத் திட்ட செயல்முறையானது ஆரம்பிக்கப்பட்டவுடன், குழுவானது பல்வேறு வரி அமைச்சகங்களைச் சந்தித்து, நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட அவர்களின் திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் GRB இன் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியது. 2017 வரவு செலவுத் திட்ட அழைப்பில் 12 GRB KPIகளை அறிமுகப்படுத்தியது உட்பட கடந்த காலத்தில் அரசாங்கத்தால் பாராட்டத்தக்க முயற்சிகள் காணப்பட்டன. அரசாங்கப் பிரதிநிதிகளுடனான கடந்தகாலக் கலந்துரையாடல்களின் போது, GRBக்கான உறுதியான கண்காணிப்பு பொறிமுறையால் இந்த அறிமுகமானது பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். மேற்கூறிய அனுபவங்கள் மற்றும் ஆலோசனைகளில் இருந்து இந்த கையேடு தொகுக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சானது, உள்ளடக்கல், பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைக்குத் தீர்வுகாணல் என்பவற்றை மேம்படுத்துவதற்கு, 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட அழைப்பின் ஒரு சேர்க்கையாக முன்னெடுத்துச் செல்வதற்காக குறிப்பிட்ட எட்டு முக்கிய பகுதிகளுடன் கூடிய ஒரு சுற்றறிக்கையைப் பகிர்ந்துள்ளது. பாலின சமத்துவத்திற்கான தேர்வுக் குழுவானது, 2022 வரவுசெலவுத் திட்டத்தின் பாலினப் பொறுப்புணர்வைக் கண்காணிப்பதற்கு, தேர்வுக் குழுவின் மேற்பார்வைச் செயற்பாட்டிற்கு ஏற்ப, பெண்களின் இராஜாங்க அமைச்சகத்துடன் இணைந்து பங்காற்றுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள், தேசிய வரவு செலவுத் திட்டத்தில் IGRBஇனை உள்ளடக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றோம். எனவே, முக்கிய IGRB எண்ணக்கருக்கள் மற்றும் கருவிகளை தொழில்நுட்ப ரீதியாக அறிந்து கொள்ள பாராளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு இந்த வழிகாட்டியானது மகத்தான ஆதரவாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன். தேசிய வரவு செலவுத் திட்ட விவாதம் /விவாதங்களில் அர்த்தமுள்ள வகையில் ஈடுபட இந்த வழிகாட்டியைப் பயன்படுத்துமாறு எனது சக பாராளுமன்ற உறுப்பினர்களை நான் அழைக்கிறேன்.

இந்த வழிகாட்டியை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் மற்றும் எனது சக குழு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றேன். குழுவிற்கு அவர்களின் தொடர்ச்சியான ஆதரவு இல்லையென்றால், இந்த வழிகாட்டி இவ்வளவு குறுகிய காலத்திற்குள் சாத்தியமற்றதாக இருந்திருக்கும்.





## திருமதி குஷானி ரோஹணதீர அவர்களின் செய்தி

பணியாட்தொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர், இலங்கைப் பாராளுமன்றம்

பிரதானமாக பாராளுமன்ற உறுப்பினர்களால் பயன்படுத்தப்படும் உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டம் தொடர்பான விரைவான குறிப்பு வழிகாட்டியை இந்த சரியான தருணத்தில் தயாரித்ததற்கான முன்முயற்சிக்காக பாலின சமத்துவத்திற்கான தெரிவுக்குழுவிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக் குழுவானது, அவர்களுடைய மேற்பார்வை மற்றும் பிரதிநிதித்துவ வகிபங்கை நியாயப்படுத்தும் வகையில், மிகவும் தேவையான கொள்கை முன்முயற்சிகள் மூலம் பாலின சமத்துவத்தை மேம்படுத்த எப்போதும் முனைப்புடன் செயல்படுகின்றது. IGRB உடன் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் கருவிகளைப் பற்றிப் புரிந்துகொள்வதற்கு, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தக் குறிப்பு வழிகாட்டியானது பெரிதும் பயன்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன், இதனால் அவர்கள் பாலின சமத்துவமான தேசிய வரவு செலவுத் திட்டம் ஒன்றிற்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிக்க முடியும்.

இவ் வழிகாட்டியானது வரவு செலவுத் திட்ட செயன்முறையின் ஒரு முக்கியமான தருணத்தில் வெளிவருகின்றது. மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட விவாதத்தை, அதிகளவு பாலின- பதிலளிப்பிற்கும் மற்றும் உள்ளடக்கலுக்குமான வெளியீடுகளை நோக்கி வழிநடாத்தத் தேவையான தொழில்நுட்ப அறிவை வலியுறுத்தும் வகையில் வழங்கும். விவாதமானது ஆண்டுதோறும் ஆண்டின் கடைசி இரண்டு மாதங்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கோவிட் 19 ஆனது குடும்ப வன்முறை, மற்றும் பெண்கள் தங்களுடைய பல்வேறு வகிபங்குகளை நிர்வகிக்கப் போதுமான நெகிழ்திறன் மிக்க வேலைவாய்ப்புக்களாகக் கருதும் முறைசாரா வேலைகளில் நிச்சயமற்ற தன்மையை அதிகரிப்பது உள்ளிட்ட பாலினப் பிரச்சினைகளை அதிகப்படுத்தியுள்ளது. நிகழ்நிலைக் கல்விக்கான அவர்களின் பங்களிப்பின் மீதான கோரிக்கைகள் மற்றும் பிற சவால்களுக்கு மத்தியில் அதிகரித்த சுகாதார அபாயங்களைச் சமாளிப்பது போன்ற காரணங்களால் அவர்களின் பராமரிப்பு வழங்கும் வகிபங்கின் மீதான சுமைகள் தீவிரமடைந்துள்ளன. எனவே, நாட்டின் சனத்தொகையில் 52%இனை உள்ளடக்கிய பெண்கள் உட்பட சமூகத்தின் விளிம்புநிலைப் பிரிவினரின் சுமையைக் குறைக்க, பாலின அடிப்படையிலான அதிகார ஏற்றத்தாழ்வுகளை இலங்கை கவனமாக நிவர்த்தி செய்வது அவசியமானதாகும். இந்த சமச்சீரற்ற தன்மையை தீர்க்க தேசிய வரவு செலவுத் திட்டமானது முக்கியமானதாகும்.

இந்த வழிகாட்டி, தேசிய வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களால் பயன்படுத்தப்படக்கூடிய உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படைகளையும் மற்றும் வரவு செலவுத் திட்ட சுழற்சி முழுவதுமான அதனுடைய பின்தொடர் நடவடிக்கைகளையும் முன்வைக்கிறது.

இந்த சந்தர்ப்ப வெளியீட்டிற்காக, இலங்கைப் பாராளுமன்றத்தின் சார்பாக இக் குழுவிற்கு நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். எதிர்காலத்தில் இது போன்ற அனைத்து அர்த்தமுள்ள முயற்சிகளுக்கும் பாராளுமன்ற செயலகம் தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்பதையும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.



# முன்னுரை

உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் தொடர்பான விரைவான குறிப்பு வழிகாட்டியானது பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் புத்தாக்க சிந்தனையில் உருவானதொன்றாகும். அத்துடன் இந்த வழிகாட்டியானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு ஆதாரப் புத்தகத்திற்கான தேவையைப் பூர்த்தி செய்யும்.

இந்த வழிகாட்டியின் பிரதான நோக்கம் உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலுடன் தொடர்புடைய பல்வேறு எண்ணக்கருக்கள் தொடர்பில் தெளிவை வழங்குவதாகும். மற்றும் இலங்கையில் உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தைப் பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களிடையே நன்கு அறியப்பட்ட கருத்தாடல் ஒன்றை ஆரம்பிப்பதும் ஆகும். இந்த வழிகாட்டியானது திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலின் குறிப்பான தொழில்நுட்பத் தகவல்கள் அனைத்தையும் உள்ளடக்காது. ஆனால் பொது அறிவு மற்றும் அடிப்படைப் புரிதலுக்கான குறைந்தபட்சத் தகவல்களை வழங்கும். மேலும் தெளிவான மற்றும் விரிவான தகவல்களுக்கு, மிக விரைவில் வெளியிடப்பட இருக்கும் “உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் குறித்த இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கையேடு” இனைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்க்க முடியும்.

இந்த உள்ளடக்கப் பக்கத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள படி, இந்த வழிகாட்டியானது வரவு செலவுத் திட்ட சுழற்சியின் பல்வேறு கட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபடுவதற்கான இடங்களைக் கோடிட்டுக் காட்டும் அதேவேளை இலங்கையில் திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலின் எண்ணக்கருக்கள் மற்றும் செயன்முறைகள் பற்றிய தகவல்களையும் வழங்குகின்றது. தேசிய கொள்கைக் கட்டமைப்புக்களுக்கு ஏற்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களில் செல்வாக்குச் செலுத்துவதில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களதும் வகிபங்குகள் இந்த வழிகாட்டியின் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், நிலையான அபிவிருத்தி இலக்கு 5 (SDG 5) மற்றும் பிற நிலையான அபிவிருத்தி இலக்குகளில் (SDGs) பொருத்தமான பாலின சுட்டிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் இது மேற்கோள் காட்டுகின்றது.

இந்த வழிகாட்டியானது வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும் போதும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் விலைமதிப்பற்ற உள்ளீடுகளுக்காக முன்வைக்கப்படும் போதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடல்களிலும் மற்றும் விவாதங்களிலும் முனைப்புடன் ஈடுபடுவதற்கும் மற்றும் தகவலறிந்த பங்குபற்றுதலை வழங்குவதற்கும் அவர்களைத் தயார்படுத்துவதற்கும் உதவும். இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடக்கல் மற்றும் பாலின சமத்துவ நிகழ்ச்சி நிரல்களைப் பாராளுமன்ற விவாதங்களில் முன்னெடுப்பதற்கும் மற்றும் இலங்கையில் பாலின சமத்துவத்துவ நன்மைகளை மக்களுக்கு உறுதி செய்வதற்கும் இத்தகைய தளங்களைப் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

பாலின வரவு செலவுத் திட்டமிடல் நிபுணர், சிறியானி பெரேரா இந்த வழிகாட்டியை எழுதியுள்ளார் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலை ஊக்குவிப்பதற்காக பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்திற்கு தொழிநுட்ப அறிவை வழங்கியுள்ளார்.



## அலகு ஒன்று : உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் என்றால் என்ன?

ஒரு அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடிய மிகவும் முக்கியமான கொள்கைக் கருவிகளில் வரவு செலவுத் திட்டங்கள் உள்ளன. ஒரு புறம் அவை ஒரு நாட்டினுடைய ஒட்டுமொத்த வருவாய் மற்றும் செலவினங்களின் அளவைப் பாதிக்கின்றன, அதேவேளை மறுபுறம் அதன் அரசியல் முன்னுரிமைகளைப் பிரதிபலிக்கின்றன. வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் பாலின-நடுநிலையானவையாகத் தோன்றினாலும் கூட, செலவின முறைகள் மற்றும் அரசாங்கம் வருவாயை உயர்த்தும் விதம் என்பன ஆண்கள் மற்றும் சிறுவர்களுடன் ஒப்பிடும் போது பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது வித்தியாசமான தாக்கத்தையே ஏற்படுத்துகின்றது என அனுபவ ரீதியான கண்டுபிடிப்புக்கள் காட்டுகின்றன, பெரும்பாலும் முன்னையவற்றுக்குத் தீங்குவிளைவிக்கின்றது. சமூகத்தில் ஆண்களும் பெண்களும் வகிக்கும் சமூக ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட வகிபங்குகளே காரணமாகும், பாலின ரீதியாக வகுக்கப்பட்ட தொழிலாளர் பிரிவு, வெவ்வேறு பொறுப்புக்கள் மற்றும் திறன்கள், மற்றும் ஆண்களும் பெண்களும் முகங்கொடுக்கும் வெவ்வேறு விதமான கட்டுப்பாடுகள், இவை அனைத்தும் பொதுவாக பெண்களைத் தங்களுடைய சமூகத்திலுள்ள ஆண்களுடன் ஒப்பிடும் பொழுது தாழ்வான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அதிகாரங்களில் சமமற்ற நிலையில் வைக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் (GOSL) வரவு செலவுத் திட்டமானது அமைச்சுக்கள், முகவர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் போன்றவற்றுக்கு வளங்களை ஒதுக்கீடு செய்வதையும் மற்றும் 12 மாத காலத்திற்குள் அனைத்துக் கொள்கைகளையும் செயற்படுத்துவதையும் தீர்மானிக்கும் ஒரு முக்கியமான நிர்வாகக் கருவியாகும்.[1] நிதி அமைச்சானது (MOF) தேசிய வரவு செலவுத் திட்டத்தின் உருவாக்கம் மற்றும் தொடர்புடைய பொது செலவினங்களின் முகாமைத்துவம் என்பவற்றை மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் வரி அமைச்சகங்கள் மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களுடன் திறம்பட ஒருங்கிணைவதன் ஊடாக வரவு செலவுத் திட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்கும் பொறுப்பான மிகவும் முக்கியமான அமைச்சாகும்.[i] மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் நிதி ஆணைக்குழுவினால் மேற்பார்வை செய்யப்படும் இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்குமான மாகாண வரவு செலவுத் திட்டங்களும் உள்ளன. இலங்கையின் 25 மாவட்டங்களுக்கும் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குமான தனியான வரவு செலவுத் திட்டங்கள் உள்ளன.

**உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் என்றால் என்ன?**

உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் என்பது இலங்கை அரசாங்கத்தினுடைய (GOSL) திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் செயன்முறைகளில் பாலின தொடர்பின் அடிப்படையில் சமூகப் பரிமாணங்களை ஒருங்கிணைப்பதற்கான ஒரு கருவியாகும். முக்கியமாக, அத்தகைய அணுகுமுறையானது, உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தைப் பாதிக்கும் முக்கியமான சமூக-பொருளாதார மற்றும் கொள்கை முயற்சிகளைப் புறக்கணிக்கும் வழக்கமான வரவு செலவுத் திட்டங்களின் விளைவுகளை மேம்படுத்துகின்றது. நாடு சார்ந்த சூழ்நிலைகளின் அடிப்படையில், வயது, மதம் அல்லது இனத் தொடர்பு, அல்லது வசிக்குமிடம் (நகர்ப்புறம் /கிராமப்புறம், வெவ்வேறு மாகாணங்கள்) போன்ற சமத்துவமின்மையின் ஏனைய காரணிகளும் கவனிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

1 இலங்கையில் தேசிய வரவு செலவுத் திட்டமானது ஜனவரி1 முதல் டிசம்பர் 31 வரை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய கொள்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில், வரவு செலவுத் திட்ட செயன்முறையின் ஒட்டு மொத்த சூழமைவிற்குள்ளும் தெளிவான பால்நிலை முன்னோக்கு ஒன்றை விஷேட செயன்முறைகள் மற்றும் பகுப்பாய்வுக் கருவிகளினூடாக ஒருங்கிணைப்பதே பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய வரவு செலவுத் திட்டம் என பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) வரையறுக்கின்றது. பாலின வரவு செலவுத்திட்டமானது மூன்று படிமுறைகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது:

(a) பிரச்சனைகளின் பகுப்பாய்வு, (b) பாலின சமத்துவ விளைவுகளை அடைந்து கொள்வதற்கு வரவு செலவுத் திட்டத்தினை மறுசீரமைத்தல், மற்றும் (c) வரவு செலவுத் திட்டத்தின் அனைத்து செயன்முறைகளிலும் பாலினத்தை முறையாக உட்பொதித்தல்.[ii]

சுருக்கமாக, உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் என்பது பாலின ஒப்புறவு மற்றும் பாலின சமத்துவ முன்னோக்குகளை வெவ்வேறு கட்டங்களில்– இலக்குக் குழுக்களின் தேவைகளின் மதிப்பீடு/கொள்கை மதிப்பாய்வு/திட்டமிடல்/ நிகழ்ச்சித் திட்ட உருவாக்கம், வளங்களின் ஒதுக்கீடு, திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களை செயற்படுத்துதல், வரவு செலவுத் திட்டத் தாக்கங்களின் மதிப்பீடு, வளங்களின் மீள் உருவாக்கம் – இணைப்பதற்குத் தேவையான ஒரு செயன்முறையாகும்.

| **உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளித்தல் என்றால் என்ன?** | |
|---|---|
| **உள்ளடக்கல்:** | உள்ளடக்கல் என்பது சமூகத்திலும் மற்றும் வளர்ச்சிப் பொருளாதாரத்திலும் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டின் விதிமுறைகளை மேம்படுத்தும் ஒரு செயன்முறையாகும். குறிப்பாக பின்தங்கிய மக்களுக்கு, வாய்ப்புக்கள், வளங்களுக்கான அணுகல், அவர்களுடைய கருத்துக்கள் மற்றும் அவர்களுக்கான மரியாதையை மேம்படுத்துதல் மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல் மூலம். |
| **பாலினம்:** | பாலினம் என்பது ஒரு குறிப்பிட்ட கலாச்சாரம்/ அமைவிடத்தில் உள்ள ஆண்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் சமூகத்தினால் கட்டமைக்கப்பட்ட வகிபங்குகள், பொறுப்புக்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள அந்தஸ்துகள் மற்றும் அவற்றை ஆதரிக்கும் சமூகக் கட்டமைப்புக்கள் ஆகும். பாலினம் என்பது கலாச்சாரங்களுக்குள்ளும் மற்றும் அவற்றுக்கு இடையேயும் காலத்திற்கேற்ப மாறுபடும் நிரந்தரமற்ற கற்றல் நடத்தையாகும் |
| **பாலினத்திற்கு பதிலளித்தல்** | என்பது அபிவிருத்தி முயற்சிகளில் பாலின ஒப்புறவு மற்றும் பாலின சமத்துவ நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்கும் மற்றும் திட்டங்கள் மற்றும் பாலின வரவு செலவுத் திட்டங்களின் ஊடாக பாலின இடைவெளிகள் மற்றும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் முனைப்புள்ளதாக இருத்தல் என்று அழைக்கப்படுகின்றது. |
| **பாலின ஒப்புறவு** | என்பது ஆண்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் மற்றும் பிற பாலின அடையாளங்களுக்கும் நியாயமாக இருக்கும் ஒரு செயன்முறையாகும். நியாயத்தை உறுதிப்படுத்துவதற்கு, ஆண்களும் பெண்களும் ஒரே நியாயமான தளத்தில் இயங்குவதை மாறாக தடுக்கக் கூடிய பெண்களின் வரலாற்று மற்றும் சமூகக் குறைபாடுகளை ஈடுசெய்யக் கூடிய உத்திகள் மற்றும் மூலோபாயங்கள் பெரும்பாலும் கிடைக்க வேண்டும். ஒப்புறவானது சமத்துவத்திற்கு வழிவகுக்கின்றது. |
| **பாலின சமத்துவம்** | என்பது எண்ணிக்கை, முக்கியத்துவம் மற்றும் மதிப்பு என்பவற்றின் அடிப்படையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையேயான சமத்துவ நிலையாகும். கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், அரசியல் ஈடுபாடு, பாதுகாப்பு மற்றும் நீதி என்பவற்றுக்கான அணுகல் அடிப்படையிலான பாலின சமத்துவமானது ஒரு அடிப்படை மனித உரிமையாகும். சமத்துவம் என்பது நீண்ட-கால உரிமை அடிப்படையிலான வளர்ச்சி இலக்காக இருக்க வேண்டும். ஒப்புறவானது அதனை நோக்கி நகர்வதற்கான ஒரு மூலோபாயமாக இருக்கலாம் |

எனவே, திட்டங்களை உருவாக்கும் போதும் மற்றும் வளங்களை ஒதுக்கீடு செய்யும் போதும், வாய்ப்புக்கள், பங்கேற்பு என்பவற்றிலுள்ள இடைவெளிகளைக் கருத்திற் கொள்வதும் மற்றும் அனைத்து மக்கள் குழுக்கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்குப் பயனுள்ளதாக அமைவதைக் கருத்திற் கொள்வதும் மற்றும் அவ்வாறான இடைவெளிகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் முக்கியமானதாகும். அனைவருக்கும் ஒரே மாதிரியான நன்மைகளை எதிர்பார்த்து மக்கள் குழுக்கள்/ ஆண்கள் மற்றும் பெண்களை ஒரே விதமாக நடாத்துவதற்கும் மற்றும் சமத்துவ நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கும் சாத்தியம் இல்லாமல் இருக்கலாம். பல தசாப்தங்களாக உள்ள சமூக-பொருளாதார மற்றும் கலாசாரப் பாகுபாடுகள், புவியியல் சார்ந்த தனிமைப்படுத்தல்கள், இன மற்றும் பிற சமூக அநீதிகள் என்பன பாகுபாடுகளையும் மற்றும் மக்களின் விலக்கல்களையும் ஏற்படுத்தியிருக்கலாம். முதலில் இவை உறுதியான நடவடிக்கைகளின் மூலம் சரிசெய்யப்பட வேண்டும். அவ்வாறான உறுதியான நடவடிக்கைகள், நீண்ட காலத்திற்கு, சமத்துவ நடவடிக்கைகளுக்கான ஒரு அடித்தளத்தைத் தயார்படுத்தக் கூடிய ஒரே நியாயமான தளத்தை உருவாக்கலாம்

ஒரு சிறந்த உதாரணம் கல்வித் துறை ஆகும். சில காலங்களுக்கு முன்பு, பெண்கள் கல்வி வாய்ப்புக்களை அணுகுவதற்கும் மற்றும் இலங்கையிலுள்ள சம கல்வியின் நன்மைகளை அனுபவிப்பதற்கும் பல கஷ்டங்களை எதிர் நோக்கினர். சமூகப் புலக்காட்சிகள், கலாசார மற்றும் பாரம்பரியத் தடைகள், ஆணாதிக்க மனோபாவங்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கான முக்கியத்துவம் போன்ற அனைத்தும் பெண்கள் பாடசாலைகளிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கு வழிவகுத்தன. இருப்பினும், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட உறுதியான நடவடிக்கைகள் பெண்கள் இலவசக் கல்வி, இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள் போன்றவற்றை அணுகுவதற்கு அவர்களுக்கு வழிவகுத்தன. அத்துடன் பெண்களுக்குக் கல்வியூட்டுவது தொடர்பான நேரான மனோபாவங்களை ஊக்குவிப்பதில் ஊடகங்களும் அதிகளவில் பங்களித்தன. இத்தகைய அனைத்து சமத்துவ நடவடிக்கைகளும் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு வழிவகுத்தது. இதன்படி, 2019 இல் இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்வியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையிலான விகிதமானது மூன்றாம் நிலைக் கல்வியில் இணையும் ஒவ்வொரு ஆணுக்கும் 1.38 பெண்களாகக் காணப்பட்டது.

'பெண்களின் வரவு செலவுத் திட்டங்கள்' அல்லது 'பாலின-உணர்திறன் மிக்க வரவு செலவுத் திட்டங்கள்' என்பன பெண்களுக்கான அல்லது ஆண்களுக்கான தனித்தனியான வரவு செலவுத் திட்டங்கள் அல்ல என்பதை அங்கீகரிப்பது முக்கியமானதாகும். அவை சமூகத்தில் உட்பொதிந்திருக்கும் பாலின தொடர்புகளைக் கருத்திற் கொண்டு ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களின் வெவ்வேறு குழுக்கள் என்பவற்றின் மீது அரசாங்கத்தினுடைய பிரதான வரவு செலவுத் திட்டம் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தின் அடிப்படையில் அதனை உடைப்பதற்கான அல்லது பிரிப்பதற்கான முயற்சிகள் ஆகும். இது ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றும் சமூகத்தின் பாகுபாட்டிற்குட்பட்ட பிற பாலினங்கள் என்பவற்றின் மீது கொள்கைகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்கள் ஏற்படுத்தக் கூடிய வெவ்வேறு தாக்கங்களை மதிப்பாய்வு செய்கின்றன

**பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டம் என்பது:**

**பெண்களுக்கான ஒரு தனியான வரவு செலவுத் திட்டம் அல்ல;**

**ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒரே அளவில் செலவளிப்பது என்பது பற்றியதல்ல;**

**பெண்களையும் சிறுமிகளையும் குறிப்பான இலக்காகக் கொண்ட நிதித் திட்டங்கள் மட்டுமல்ல;**

**பாலின வரவு செலவுத் திட்ட அறிக்கை ஒன்றை வெளியிடுவது மட்டுமல்ல;**

**பெண்களுக்கான ஒதுக்கீடுகளை மட்டும் அதிகரிப்பதல்ல – புதிய திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அறிவிப்பதல்ல;**

**பெண்கள் விவகார அமைச்சின் முழுப் பொறுப்பும் அல்ல.**

## அலகு இரண்டு : உள்ளடக்கல் மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலானது இலங்கைக்கு ஏன் முக்கியமானது?

பாலின சமத்துவ இடைவெளிகளைக் குறைப்பதற்கோ அல்லது அதிகரிப்பதற்கோ பேரினப் பொருளாதாரக் கொள்கை பங்களிக்கும் என்ற வளர்ந்து வரும் புரிதலில் இருந்து பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய வரவு செலவுத் திட்டம் (GRB) தொடர்பான பேச்சு உருவானது. பாலின சமத்துவமின்மையின் பொருளாதார செலவானது பெண்களுக்கு மட்டுமல்லாது, ஒட்டு மொத்த சமூகத்திற்கும் விலை உயர்ந்ததாகும் என்பதை ஏற்றுக்கொள்வதன் மூலம் இந்தப் புரிதலானது ஆழப்படுத்தப்படுகின்றது (எல்சன் 2002)[iii]. பொருளாதார இலக்குகள் மற்றும் சமூக அர்ப்பணிப்புக்களுக்கு இடையே அதிக நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான கட்டாயக் காரணங்கள் இவை என்றும் மற்றும் இவ்வாறு GRB முயற்சிகளை மேற்கொள்வது என்றும் வாதிடப்படுகின்றது. (ஹெவிட் மற்றும் முகோபாத்யாய் 2002)[iv].

வரவு செலவுத் திட்டங்கள் அரசாங்கத்தின் முக்கியமான கொள்கைக் கருவிகள் ஆகும். எந்தவொரு கொள்கையும் அதற்கான போதுமான நிதி ஒதுக்கீடுகள் இல்லாவிடின் செயற்படாது மற்றும் கொள்கையானது அரசாங்க வரவு செலவுத் திட்டங்களுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளது என்பதை இது காட்டுகின்றது. அரசாங்க வரவு செலவுத் திட்டங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான சக்திவாய்ந்த வழிமுறையாகும்.[v] எனவே பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய வரவு செலவுத் திட்டம் என்பது பாலின மாற்றத்தையும் மற்றும் பெண்களின் வலுவூட்டலையும் ஊக்கவிக்கக் கூடிய ஒரு மூலோபாயமாகும்.

பின்வருபவை உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டமிடலானது இலங்கைக்கு ஏன் முக்கியமானது என்பதற்கான பிரதான காரணங்களாகும்:

a. இலங்கை போன்ற பல இனங்கள் மற்றும் பல மதங்களைக் கொண்ட நாடு அதனுடைய மக்களுக்கு சேவை செய்வதற்கான ஒரு நியாயமான மற்றும் சமத்துவமான அணுகுமுறையாக அதனுடைய திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களில் உள்ளடக்கல் தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

b. 1978 அரசியலமைப்பின் உறுப்புரை 12(2), “எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, பாலினம், அரசியற் கருத்து, பிறந்த இடம், அல்லது அவ்வாறான எந்தவொரு அடிப்படையிலும் பாகுபாடு காட்டப்படக் கூடாது” எனக் குறிப்பிடுகின்றது.

c. உள்ளடக்கிய திட்டமிடல்களுக்கு அழைப்பு விடுக்கும் பிராந்திய மற்றும் மாவட்ட ஏற்றத்தாழ்வுகளுக்கு ஒரு நல்ல உதாரணம் வறுமை நிலையாகும். 2016 இல் இலங்கையில் வறுமை எண்ணிக்கை சுட்டி 4.1% ஆகும். மற்றும் இது துறைகள் அடிப்படையில் வேறுபடுகின்றது: நகர்ப்புறம் 1.9%, கிராமப்புறம் 4.3% மற்றும் பெருந்தோட்டத் துறை 8.8% ஆகும். 2016 இல் பெண்களின் வறுமை எண்ணிக்கை சுட்டியானது ஆண்களின் 4.1% உடன் ஒப்பிடும் போது 3.9% ஆகக் காணப்பட்டது. ஏழை மக்கள் சனத்தொகையில் 4.1% ஆக மட்டும் இருந்தாலும், பாதிக்கப்படக் கூடிய மக்களின் கணிசமான ஒரு அளவானது வறுமைக் கோட்டுக்கு சற்று மேலே திரண்டுள்ளது மற்றும் கோவிட்-19 நிலைமையானது அவர்களில் அதிகமானோரை வறுமைக் கோட்டுக்குக் கீழே இழுத்துச் சென்றுள்ளது என்பது உறுதியான விடயமாகும்.

d. இலங்கையில் வறுமைப் புள்ளிவிவரமானது, வறுமை எண்ணிக்கை மற்றும் வறுமையான வீடுகளின் சுட்டிகள் உயர்வாக உள்ள மாவட்டங்கள் உள்ளன என்பதைக் காட்டுகின்றது. 2016 ஆம் ஆண்டின் வீட்டு வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான கணக்கெடுப்பின் படி, நகர்ப்புற (1.9%) மற்றும் கிராமப்புற (4.3%) வறுமை எண்ணிக்கை சுட்டிகளை விட பெருந்தோட்டத் துறை (8.8%) சுட்டியானது உயரளவைக் காட்டுகின்றது. மாவட்ட ரீதியில் கிளிநொச்சி மாவட்டமானது 18.2% என்ற உயரளவு வறுமை எண்ணிக்கை சுட்டியைக் காண்பிக்கின்றது. அதேவேளை, முல்லைத்தீவு 12.7%, மட்டக்களப்பு 11.3%, திருகோணமலை 10.0%, யாழ்ப்பாணம் 7.7%, கேகாலை 7.1%, பதுளை 6.8%, இரத்தினபுரி 6.5%, நுவரெலியா 6.3%, மொனராகலை 5.8%, கண்டி 5.5% மற்றும் கொழும்பு 0.9% இனையும் காண்பிக்கின்றன.

e. 2019 ஆம் ஆண்டில் மக்கள் தொகையில் 51.58% பெண்களைக் கொண்ட இலங்கையில் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் அவசியமானதாகும். அநேகமான துறைகளில் ஆண்களை விட கல்வியில் பெண்களின் அடைவுகள் உயர்வானதாக உள்ளன, ஆனால் அவர்கள் தொழிலாளர் சக்தியில் 35% ஆக மாத்திரமே காணப்படுகின்றனர் மற்றும் முறை-சாரா துறைகளிலேயே பெரும்பாலும் குவிந்துள்ளனர்.

f. பாராளுமன்றத்தில் பெண்கள் 5.4% ஆகவும் மற்றும் 2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டு முறைமை காரணமாக ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களில் 1.9% (2014) ஆகக் காணப்பட்ட பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் வீதம் 22% ஆக உயர்ந்துள்ளது.

g. இலங்கையில், எப்போதும் துணையுடன் வாழும் பெண்கள் இவ்வாறான வீதங்களில் வன்முறைகளை அனுபவித்துள்ளனர்: உடலியல் வன்முறை 18.9%, பாலியல் வன்முறை 6.8%, உளவியல் வன்முறை 27.9%, பொருளாதார வன்முறை 18.1%. பாலின பாகுபாடானது வெளிப்படையான ஒரு விடயமாகும் மற்றும் அந்த விடயங்களை சரிசெய்வதற்கு உறுதியான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

**அடிப்படையான வாதம் என்னவெனில்,**

- **வரவு செலவுத் திட்டங்கள் ஆண்களையும் பெண்களையும் வெவ்வேறு விதங்களில் பாதிக்கின்றன, ஏனெனில் பொருளாதாரத்தில் அவர்கள் வகிக்கும் சமூகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வெவ்வேறு வகிபங்குகளினாலேயே ஆகும்.**
- **விஷேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் அரசாங்கத்தின் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களிலிருந்து ஆண்களை விட பெண்கள் குறைந்தளவு நன்மைகளையே பெறுவார்கள்.**
- **உறுதியான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பெண்களினால் முகங்கொடுக்கப்படும் பாலின அடிப்படையிலான குறைபாடுகளை அரசாங்க வரவு செலவுத் திட்டங்கள் மேலும் வலுப்படுத்தலாம் / மோசமாக்கலாம்.**
- **பாலின-பார்வை அற்ற வரவு செலவுத் திட்டங்கள் பாலின பக்கச்சார்புகள் மற்றும் படிவார்ப்புக்கள்** (stereotypes) **என்பவற்றைக் கடத்துவதற்கும் மற்றும் மீள் உருவாக்குவதற்குமான கருவியாக இருக்கும்.**

**இலங்கையில் உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டமிடலின் அனுகூலங்கள்:**

1. IGRB என்பது அவிபிருத்தித் திட்டங்கள் மூலம் அரசாங்கத்தின் கொள்கை இலக்குகள் அடைந்து கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும் மற்றும் அத்தகைய கொள்கைகளின் பாலின சமத்துவக் குறிக்கோள்களை அடைவதற்குப் போதுமான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும் கண்காணிப்பதற்கான ஒரு வழியாகும். துறை சார்ந்த கொள்கைகளின் பாலினக் குறிக்கோள்கள், பெண்கள் மற்றும் ஆண்களின் வெவ்வேறு தேவைகள், விருப்புத் தேர்வுகள் மற்றும் ஆர்வத்திற்குரிய விடயங்கள் மற்றும் ஒரே மாதிரியான கொள்கைகளிலிருந்து அவர்கள் எவ்வாறு வெவ்வேறு விதங்களில் பயனடைகின்றார்கள் என்பதை அடையாளங்காண்கின்றன.

2. IGRB ஆனது நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDGs) வெற்றியைக் கண்காணிப்பதற்கான ஒரு சிறந்த கருவியாகும், குறிப்பாக SDG 5 மற்றும் அதனுடைய இலக்குகளின் அடைவுகள் மற்றும் 14 நிலையான அபிவிருத்தி இலக்குகளையும் குறுக்கிடும் ஏனைய 80 குறிகாட்டிகளின் அடைவுகள்.

3. IGRB ஆனது வறுமை ஒழிப்பானது பயனுள்ளதாக, நியாயமானதாக மற்றும் பாலின சமத்துவமிக்க விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழியாகும். இலங்கையில் வறுமையை பெண்ணியமாக்குவதும் மற்றும் வருமான வறுமையின் திட்டவட்டமான அம்சத்தைக் கொண்ட பெண்களினால் தலைமை தாங்கப்படும் வீடுகளில் 25% இற்கும் அதிகமானவை காணப்படுகின்றன என்பதும் அனைவரும் அறிந்த விடயம் ஆகும்.

4. IGRB ஆனது தேசிய வரவு செலவுத் திட்டத்தின் உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய ஒதுக்கீட்டை ஊக்குவிக்கின்றது. இந் நடவடிக்கையானது இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் காணப்படும் பெண்களின் ஆக்கத்திறனை அதிகரிக்கும். குறைந்துவருகின்ற பாலின சமத்துவமின்மைகளுக்கும் மற்றம் உயர் வளர்ச்சி வீதங்களுக்கும் இடையே ஒரு நேர்மறையான தொடர்பு இருப்பதை பல ஆய்வுகள் காட்டுகின்றன. தகவல்கள், கடன்கள், விரிவாக்கல் சேவைகள், உள்ளீடுகள் மற்றும் சந்தைகள் போன்றவற்றுக்கான பெண்களுக்கான அணுகல் மேம்படுத்தப்பட்டால், அவர்களுடைய நேரச் சுமை குறைக்கப்பட்டால், உதாரணமாக, தொழிலாளர்-சேமிப்பு உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல், பெண்களுடைய ஆக்கத்திறனானது விகிதசமனற்ற விதத்தில் அதிகரிக்கும்.

5. IGRB ஆனது சர்வதேச உரிமைகள் சட்டக் கட்டமைப்பிற்கான (1995 இல் பெய்ஜிங்கில் பெண்களுக்கான நான்காவது உலக மாநாட்டில் நிறுவப்பட்டவை போன்று, அத்துடன் தேசிய கொள்கை ஆவணங்களில் உள்ளவை போன்று) அரசாங்கத்தின் உறுதிப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவுகின்றது. குறிப்பாக பெண்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான வளங்களின் ஒதுக்கீடுகளைக் கோரும் பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச மாநாடு (CEDAW)

6. IGRB ஆனது சிறந்த மற்றும் வெளிப்படையான ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கான ஒரு வழியாகும். தேசிய வரவு செலவுத் திட்ட செயன்முறைகளில் IGRB ஆனது பிரஜைகளுக்கு மேம்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறலை வழங்குவதோடு அவர்களுடைய பாலின அடையாளம், இனம், சாதி மற்றும் சமுதாய வர்க்கம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் அபிவிருத்திப் பயன்களை சமமாக விநியோகிப்பதற்கு அழைப்புவிடுக்கின்றது. பெண்கள், ஆண்கள், சிறுமிகள் மற்றும் சிறுவர்களுக்கு நியாயமாக, நீதியாக மற்றும் பொறுப்பான முறையில் பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிப்பதை மேம்படுத்தும் செயன்முறையானது நல்லாட்சியின் வரைவிலக்கணத்தின் ஒருங்கிணைந்த பகுதி ஒன்றாகக் கருதப்பட வேண்டும்

7. IGRB ஆனது அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களைக் கண்காணிப்பதிலும் மற்றும் செயற்திறனை அறிக்கையிடுவதிலும் பாலினம் மற்றும் பால்நிலையால் வகுக்கப்பட்ட தரவுகளைக் கோருகின்றது. பால்நிலையால் வகுக்கப்பட்ட தரவுகளைப் பராமரிப்பது பற்றிய மிக அண்மையில் வெளியிடப்பட்ட அமைச்சரவை சுற்றுநிருபமானது அத்தகைய தேவையுடன் இணைகின்றது.

8. IGRB ஆனது செலவினங்கள் மிகவும் தேவையுடையவர்களுக்குப் பயனளிக்கின்றதா என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் தேசிய திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களின் செயற்றிறனை மேம்படுத்துகின்றது.

9. IGRB ஆனது விலக்கல்கள், பாலினப் பாகுபாடுகள், பாலினப் பிரச்சனைகள் போன்றவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் அதன் நிமித்தம் செயற்படுத்தப்படக்கூடிய நியாயமான மூலோபாயங்களை முன்மொழிவதற்கும் சிவில் சமூகம் ஈடுபடுவதற்கான ஒரு வாய்ப்பை எற்படுத்துவதற்கான ஒரு அணுகுமுறையாகும். ஜனநாயக நிர்வாகத்தை ஆதரிக்கும் சிவில் சமூகத்தால் திட்டங்கள் மற்றும் செலவினங்களை செயல்படுத்துவதில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கண்காணிப்பதற்கான கருவிகளையும் IGRB கொண்டுள்ளது. சிவில் சமூகத்தின் இத்தகைய கண்காணிப்பு கேள்விகளை எழுப்பலாம் மற்றும் பாரபட்சம், திறமையின்மை மற்றும் ஊழல் ஆகியவற்றை சவால் செய்ய தகவல்களை உருவாக்கலாம்.

10. IGRB ஆனது பெண்கள் ஒரே மாதிரியான குழுவாக இல்லை என்பதையும், குடும்பத் தலைவர்கள், விதவைகள், பெருந் தோட்டத்துறைப் பெண்கள், இயலாமையுடைய பெண்கள், மோதலால் பாதிக்கப்பட்ட பெண்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள், சிறு நிறுவனங்களில் உள்ள பெண்கள், வணிகப் பெண்கள் போன்றவர்களுக்கிடையே பல்வேறுபட்ட தேவைகள் இருப்பதையும் அங்கீகரிக்கிறது.

11. IGRB என்பது SGBV போன்ற பாலினம் குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், மரியாதையை ஆதரிக்கும் உத்திகளைச் செயல்படுத்துவதற்கும், பெண்கள் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அவர்களின் உரிமைகளை அடைவதற்கும் போதுமான ஒதுக்கீடுகளை உறுதி செய்வதற்கான அரசாங்க முயற்சிகளை முன்னிலைப்படுத்தவும் ஒரு நல்ல கருவியாகும்.

## அலகு மூன்று : திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்ட சுழற்சி மற்றும் உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டமிடல்

எந்தவொரு நாட்டிலும் திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்ட சுழற்சி நான்கு படிநிலைகளைக் கொண்டுள்ளது. மற்றும் உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய வரவு செலவுத் திட்டம் என்பது இந்த நான்கு படிநிலைகளிலும் உள்ளடக்கல் மற்றும் பாலின பரிமாணங்களை உள்வாங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு அணுகுமுறையாகும்.

உரு 1: வரவு செலவுத்திட்ட சுழற்சி




### படிநிலை ஒன்று: வரவு செலவுத் திட்ட உருவாக்கம்

வரவு செலவுத் திட்ட உருவாக்கம் என்பது நீண்ட மற்றும் விரிவானதுமான மற்றும் தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டங்களை உள்ளடக்கிய வருடாந்தத் திட்டமிடல் செயன்முறையுடன் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது. இந்த செயன்முறையானது அரசாங்கத்தின் பேரினப் பொருளாதாரக் கொள்கையினால் வழிநடாத்தப்படுகின்றது. மூலோபாய பேரினப் பொருளாதாரக் கொள்கை சட்டக்கட்டமைப்பானது நிதி அமைச்சு (MoF), இலங்கை மத்திய வங்கி (CBSL), கொள்கை வல்லுநர்கள், மற்றும் ஏனைய முக்கிய தேசிய மட்டக் கொள்கை உருவாக்கும் அமைப்புக்களின் கூட்டு செயலாக்கத்தினூடாக உருவாக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக மே-ஜூன் மாதங்களில் திறைசேரியினால் உருவாக்கப்படும் அமைச்சரவை ஆவணம் ஒன்றின் மூலம் சுழற்சி முறையிலான வரவு செலவுத் திட்டமானது ஆரம்பிக்கப்படுகின்றது. இவ் ஆவணமானது வரவு செலவுத் திட்ட உருவாக்க செயன்முறையை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை ஒப்புதல் மற்றும் அங்கீகாரத்தை MoF இற்காகக் கோருகின்றது. அமைச்சரவையானது இந்தக் கோரிக்கையை அங்கீகரித்து MoFஇற்கு அதிகாரத்தை வழங்கியதும், அடுத்த கட்டமாக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் வரவு செலவுத் திட்ட அழைப்பிற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதாகும். வரவிருக்கும் வரவு செலவுத் திட்ட உருவாக்கத்திற்குத் தேவையான வழிகாட்டுதலை வழங்குவதனாலும், மற்றும் பேரினப் பொருளாதார கட்டமைப்பு, கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகள், அந்தந்த ஆண்டு வரவு செலவுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய வரையறைகள் மற்றும் வடிவங்கள் தொடர்பில் தெரியப்படுத்துவதனாலும் வரவு செலவுத் திட்ட அழைப்பானது ஒரு முக்கியமான ஆவணமாகும். வரவு செலவுத் திட்ட அழைப்பானது அனைத்து அமைச்சுகக்களுக்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்தப்படுவதற்கு முன்னர், அது MoFஇன் செயலாளரினால் ஒப்புதலளிக்கப்பட வேண்டும். பின்னர் வரவு செலவுத் திட்ட அழைப்பானது அனைத்து வரி அமைச்சுக்களுக்கும், மாவட்ட செயலகங்கள் மற்றும் நிதி ஆணைக்குழு போன்ற ஏனைய முக்கியமான நிறுவனங்களுக்கும் அனுப்பப்படும். தேசிய அழைப்பின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கான வரவு செலவுத் திட்ட அழைப்பை நிதி ஆணைக்குழு உருவாக்கும். வரவு செலவுத் திட்ட அழைப்புக் குறித்து வரி அமைச்சகத் திட்டமிடல் பிரிவுகளுக்குத் தெரிவிக்கப்படும் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட ஆணைக்குழுவிடம் (NBD) சமர்ப்பிப்பதற்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக ஒவ்வொரு வரி அமைச்சகங்களிலும்

உள்ளகக் கூட்டங்கள் நடைபெறும். அமைச்சுக்கள் மற்றும் பிற இலங்கை அரசாங்க நிறுவனங்கள் வரவு செலவுத் திட்டத்தை உருவாக்கும் போது அவர்கள் வழங்கத் திட்டமிட்டுள்ள சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றன.

வழமையாக இந்த வரவு செலவுத் திட்ட அழைப்பிற்கு முன்னர் வரி அமைச்சின் திட்டமிடல் செயன்முறைகள் நடைபெறுவதுடன், பிரதேச செயலக மட்டத்திற்கு செல்லும் வரி அமைச்சுக் கட்டமைப்புகளையும் உள்ளடக்கியது. தேவைகள் மதிப்பீடுகள் வெவ்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. – கிராமம், பிரதேசம் மற்றும் மாவட்ட மட்டங்களில் மற்றும் வரி அமைச்சுக் கொள்கைகளுக்கு ஏற்ற வகையிலும் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலின்போது,வரி அமைச்சகங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் (NPD) தொடர்புகளைப் பேணி, வழிகாட்டுதலைப் பெறுகின்றன. பொதுவாக வரி அமைச்சுக்கள் மதிப்பீடுகளைத் தயாரித்து NBDஇடம் சமர்ப்பிப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் உள்ளது. பொதுவாக வரி அமைச்சகங்கள் மதிப்பீடுகளை வழங்க NPD இனால் பகிரப்பட்ட வடிவங்களைப் பயன்படுத்துகின்றன. மதிப்பீடுகள் கிடைத்தவுடன், NBD மற்றும் NPD ஆகியவை ஒவ்வொரு வரி அமைச்சகங்களுடனும் கூட்டங்களை நடாத்தி மதிப்பீடுகள் தொடர்பில் கலந்துரையாடுகின்றன. நிதி ஆணைக்குழுவானது அனைத்து மாகாண வரவு செலவுத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து NBD இற்கு அனுப்புகின்றது. பலவிதமான கூட்டங்களுக்குப் பிறகு, NBD ஆனது அனைத்து வரி அமைச்சுக்கள் மற்றும் மாகாண வரவு செலவுத் திட்டங்களின் மதிப்பீடுகளை வரைந்து, அந்தந்த ஆண்டிற்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கின்றது.

## படிநிலை இரண்டு: வரவு செலவுத் திட்ட ஒப்புதல் /சரிபார்த்தல்

வரவு செலவுத் திட்ட ஒப்புதல் /சரிபார்த்தல் என்பது தேசிய வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் மாவட்ட வரவு செலவுத் திட்டங்கள் என்பவற்றுக்கான பாராளுமன்றத்தின் பொறுப்பாகும். வரலாற்று ரீதியாக, தேசிய வரவு செலவுத் திட்டத்தின் ஒப்புதல் நவம்பர் மாதத்தில் நடைபெறுகின்றது. இதன் போது கலந்துரையாடல், விவாதங்கள் மற்றும் வாக்கெடுப்பிற்காக வரவு செலவுத் திட்டமானது தேசிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு சட்டமூலம் நிறைவேற்றப்படுகின்றது. வரவு செலவுத் திட்டமானது பாராளுமன்றத்தில் இரண்டு முறைகள் வாசிக்கப்படுகின்றது. முதன்முறை வாசிக்கப்படும் போது, ஒவ்வொரு வரி அமைச்சுக்களுக்கும் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு செய்யப்படுகின்றது மற்றும் இரண்டாவது வாசிப்பின் போது விரிவான மதிப்பீடு முன்வைக்கப்பட்டு விவாதம் செய்யப்படுகின்றது. மதிப்பீடுகளின் விவரங்கள் தயாரான பிறகு, வரவு செலவுத் திட்டமானது பொது விமர்சனத்திற்கு விடப்படுகின்றது. பாராளுமன்றத்தில் நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்ட உரை நிறைவடைந்ததும் வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் ஆரம்பிக்கப்படும். வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் என்பது பொதுவாக அல்லது குறைந்தது 22 நாட்கள் நீடிக்கும் ஒரு நீண்ட செயன்முறையாகும். இந்த செயன்முறை தொடர்பில் ஊடகங்கள் பரந்தளவில் வெளிக்கொணர்வதனால், வரவு செலவுத் திட்ட உரை மற்றும் தொடர் விவாதங்கள் தொடர்பில் பொதுமக்கள் அறிந்து கொள்கின்றனர். பொதுவாக வரவு செலவுத் திட்டங்களுக்கு பாராளுமன்றத்திற்குள்ளும், பாராளுமன்றத்திற்கு வெளியே வல்லுனர்கள் மற்றும் கல்வியியலாளர்களினாலும் வலுவான அரசியல் விவாதங்கள் நடைபெறும். இந்த விவாத செயன்முறையின் முடிவில், வரவு செலவுத் திட்டமானது இறுதியாக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, பொதுவாக இந்தக் கட்டத்தில் வாக்கெடுப்பு நடைபெறும். அது அங்கீகரிக்கப்பட்டதும், ஒவ்வொரு வரவு செலவுத் தலைப்பின் கீழும் சபாநாயகர் அங்கீகாரமளித்து உத்தரவு பிறப்பிப்பார். அங்கீகாரம் நிறைவடைந்ததும், NBD ஆனது வரி அமைச்சகங்களுக்கான சுற்றறிக்கைகளை வெளியிடுகின்றது, இது அந்தந்த ஆண்டில் ஜனவரி 1ஆம் திகதி முதல் ஒப்புதல் மற்றும் செலவினங்களுக்கான அனுமதியை வழங்கும். ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டால், அரசியலமைப்பின் 48(2) வது உறுப்புரையின் படி, அமைச்சரவையானது கலைக்கப்படும். எந்தவொரு அரசாங்கத்திற்கும் வரவு செலவுத் திட்ட சுழற்சியின் இந்தப் படிநிலையானது எந்தளவு முக்கியமானது என்பதை இது காட்டுகின்றது.

## படிநிலை மூன்று: வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுதல்

வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுதல் என்பது, அமைச்சுக்கள் மற்றும் பிற இலங்கை அரசாங்க நிறுவனங்கள் தங்களுக்கான பணத்தை எவ்வாறு செலவிடுகின்றன என்பதை வழிகாட்டும் கருவியாக வரவு செலவுத் திட்டம் மாறும் ஒரு கட்டம் ஆகும். இலங்கை மக்களுக்கு அத்தியாவசிய சேவைகள் வழங்கப்படும் வரவு செலவுத் திட்ட சுழற்சியின் கட்டமே வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதாகும். NBDஇன் ஒப்புதலுடன், துறை அமைச்சகங்களுக்கு ஜனவரி மாதம் முதல் காலாண்டு வரவு செலவுத் திட்ட நிதியை வெளியிடுமாறு வரி அமைச்சுக்கள் திறைசேரியிடம் கோருகின்றன. மேலும் இது ஒவ்வொரு காலாண்டிற்கும் தொடர்கின்றது. திட்டங்களின் செலவு மற்றும்

முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு காலாண்டிலும் வரி அமைச்சகங்கள் திறைசேரியிடம் அறிக்கையிட வேண்டும். பொதுவாக வரவு செலவுத் திட்டக் கண்காணிப்புப் பிரிவானது வரவு செலவுக் கணக்குகள் மற்றும் திட்டத்தை செயற்படுத்துதல் தொடர்பில் கண்காணிப்பதற்குப் பொறுப்பானது. NBD ஆனது தேசிய வரவு செலவுத் திட்ட செலவினங்கள் குறித்த காலாண்டு அறிக்கைகளைத் தயாரிக்கின்றது. இதே காலகட்டத்தில், முதற் காலாண்டில், NBD முந்தைய ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பாய்வு அறிக்கையையும் தயாரித்து வெளியிடும். அந்தந்த உள்ளூராட்சி சபைக் கட்டமைப்புக்களினூடாக மாகாணங்கள், மாவட்டங்கள் மற்றும் பிரிவுகளில் உள்ள வரி அமைச்சக அலுவலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு வரி அமைச்சுக்கள் திறைசேரியிடம் தெரிவிக்கும். துணைத் தேசிய மட்டத்திலுள்ள இந்த வரி அமைச்சு அலுவலகங்கள் ஒவ்வொன்றும் முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் காலாண்டு செலவினக் கூற்றுக்களை அந்தந்த மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச சபைகளுக்கு அந்தந்த வரி அமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவுகளுக்கு பிரதி ஒன்றை வழங்குவதன் வாயிலாக சமர்ப்பிக்கும். மாகாண சபைகளின் முன்னேற்ற அறிக்கைகள் நிதி ஆணைக்குழுவினால் கண்காணிக்கப்படும்.

## படிநிலை நான்கு: மதிப்பீடு மற்றும் தணிக்கை

மதிப்பீடு மற்றும் தணிக்கை ஆகியன தேசிய வரவு செலவுத் திட்டமானது எந்தளவு சிறப்பாக அல்லது எந்தளவு சிறப்பற்ற முறையில் செலவளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தீர்மானிக்கின்றன. இந்தக் கட்டத்தின் போது, இலங்கை அரசாங்கமானது நிதிகள் சட்டபூர்வமாக செலவளிக்கப்படுகின்றதா, அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் படி நிதிகள் செலவிடப்பட்டதா என்பது தொடர்பில் அறிய விரும்புகின்றது. வருடாந்த கொள்கை அமுலாக்கம் மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பாய்வு ஆகியன வரவு செலவுத் திட்ட மதிப்பாய்வு தொடர்பான குழு மற்றும் NBDஇனால் நடாத்தப்படும். ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், நிதி அமைச்சு (MoF) மற்றும் கணக்காய்வாளர் தலைமையிடம் தெரிவிக்கப்படும். கடந்த ஆண்டினுடைய வரவு செலவுத் திட்ட தணிக்கைக் கணக்கானது ஜனவரி மாதத்தில் செய்யப்படுகின்றது.

வரவு செலவுத் திட்ட சுழற்சியின் அனைத்துப் படி நிலைகளிலும் உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய வரவு செலவுத் திட்ட செயன்முறைகளை உள்ளடக்குவது முக்கியமானதாகும். அத்துடன் ஒவ்வொரு படிநிலைகளுக்கும் எளிதில் பயன்படுத்தப்படக் கூடிய பல கருவிகள் உள்ளன.

பங்களாதேசம் (இந்தியா, பங்களாதேசம் மற்றும் ருவாண்டாவில் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டது: அதித்தி ரத்தோவின் ஒப்பீடு - ORF பத்திரிகை இல. 260, ஜுலை 2020, ஒப்ஸர்வர் ஆராய்ச்சி நிறுவனம்)

**பாலின வரவு செலவுத் திட்ட அறிக்கைகள்: பங்களாதேசத்தில் ஆழம், செயற்பாடுகள் மற்றும் வடிவமைப்பு**

தனித்துவமான மற்றும் தனியான பாலின வரவு செலவுத் திட்டமானது 2009-10 காலப்பகுதியில் பங்களாதேச பாராளுமன்றத்தில் பங்களாதேச நிதியமைச்சர் வருடாந்த வரவு செலவுத் திட்டத்துடன் இணைத்து பாலின வரவு செலவுத் திட்டம் தொடர்பான பகுப்பாய்வு ஒன்றை முன்வைத்த போதே அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் பாலின வரவு செலவுத் திட்டமானது நான்கு அமைச்சகங்களை மாத்திரமே உள்ளடக்கி இருந்தது: கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன், சமூக நலன் மற்றும் பேரிடர் முகாமைத்துவம். 2011-12இல், அனைத்து அமைச்சுக்களும் மற்றும் பிரிவுகளும் GRB செயன்முறையின் கீழ் கொண்டுவரப்பட்டன. அதிலிருந்து, அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்திற்கு முன்னிலையில் பாலின வரவு செலவுத் திட்ட அறிக்கையை சமர்ப்பித்தது. இது பெண்களின் முன்னேற்றத்திற்கான கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள், பெண்களின் மேம்பாடு தொடர்பான பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் பிரிவுகளின் செயற்பாடுகள், மற்றும் இந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பில் விளக்குகின்றது.

ஒவ்வொரு அமைச்சும் பாலின வரவு செலவுத் திட்ட அறிக்கை ஒன்றைக் கொண்டுள்ளது. அது நிதி அமைச்சகத்தின் வரவு செலவுத் திட்ட ஆவணங்களின் கீழ் காட்சிப்படுத்தப்படுகின்றது. இந்த அறிக்கைகள் அமைச்சுடன் தொடர்புடைய கொள்கைகள், பெண்கள் முன்னேற்றம் தொடர்பான அமைச்சு சார்ந்த தேசிய கொள்கை உத்தரவுகள் மற்றும் பாலின சமத்துவ அடைவுகளை அடைவதற்கான இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் பற்றிய விரிவான பிரிவுகளைக் கொண்டுள்ளன. கணக்கியல் பயிற்சியாக தொடர்புடைய கொள்கைகள் மற்றும் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை வெறுமனே அடையாளம் காண்பதைத் தவிர அமைச்சின் செயற்பாடுகளில் பாலின இடைவெளிகளையும், நோக்கங்களை அடைவதற்கான தடைகளையும் அறிக்கைகள் அடையாளம் காண்கின்றன. மேலும், “அமைச்சின் செயற்பாடுகளில் பெண்களின் பங்கேற்பு மற்றும் மொத்த செலவினங்களில் அவர்களின் பங்கு” பற்றிய ஒருங்கிணைந்த தரவு வழங்கப்படுகின்றது. இது பாலின சமத்துவமின்மைக் குறியீடுகளை உருவாக்கும் சமூக-அரசியல் அதிகாரமளிக்கும் குறிகாட்டிகளை மதிப்பிடுவதற்கும் முக்கியமானது. இது பங்களாதேசமானது பாலினம் சார்ந்த முடிவெடுக்கும் செயற்பாட்டில் எத்தனை பெண்கள் ஈடுபட்டுள்ளனர் என்பது பற்றிய தரவுகளை வழங்குவதிலும், மேலும் அனைத்து உள்ளூர் அரசாங்க (யூனியன் பரிஷத்) பதவிகளிலும் பெண்களுக்காக மூன்றில் ஒரு பங்கை ஒதுக்கீடு செய்தல் உள்ளடங்கலாக அரசியல் முடிவெடுக்கும் செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பை கட்டாயமாக்கும் சட்டங்களைக் கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

2019-2020ற்கு, பங்களாதேசின் நிதி அமைச்சர் “நாட்டில் பெண்களின் மேம்பாட்டிற்காக” தேசிய வரவு செலவுத் திட்டத்தில் 30.82 சதவீத ஒதுக்கீடு மற்றும் பெண் தொழில்முனைவோருக்கான காட்சியறை வாடகைக்கு மதிப்புக்கூட்டப்பட்ட வரிவிலக்குகளை முன்மொழிந்தார். பாலின அடிப்படையிலான திட்டங்களுக்கு பணம் வழங்குவதிலும், வரி விதிப்பு பெண்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதில் கவனம் செலுத்துவதிலும் இவை முக்கியமான முயற்சிகள் என்றாலும், GRB இன் செயற்பாடுகள் வரவுசெலவுத் திட்டத்தில் பெண்களுக்கான இடத்தை உருவாக்குவது அல்லது பெண்கள் திட்டங்களுக்கு நிதியை அதிகரிப்பது மட்டுமல்ல

இருப்பினும், இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது, **“வங்காளதேசத்தில் GRB இனை செயற்படுத்துவதில் உள்ள முக்கிய பிரச்சனைகளில் ஒன்று, பயனாளிகளின் கட்டாய தரவுப்பிரிப்பு இல்லாதது மற்றும் முழு மத்திய கால வரவு செலவுத் திட்ட கட்டமைப்பு ஆவணப்படுத்தல் செயல்முறை முழுவதும் பாலினத்தின் அடிப்படையிலான தாக்கமுமாகும். இது நிதி வெளிப்படைத் தன்மையின் முக்கிய அம்சம்....** இந்த குறிகாட்டிகள் ஒரு ஒழுங்குமுறைத் தேவையாக இருக்க வேண்டும்”.

**பங்களாதேஷ் அனுபவத்திலிருந்த பாடங்களை கற்றுக்கொள்வதும், மதிப்பிடப்பட்ட தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் பாலின பகுப்பாய்வை அறிமுகப்படுத் துவதும், மதிப்பீடுகளுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதும் முக்கியமாகும். இத்தகைய பகுப்பாய்வானது திறமையான வரவுசெலவுத் திட்ட விவாதங்கள் மற்றும் பாலின சமத்துவத்திற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை கேள்விக்குற்படுத்தும்/ அல்லது அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை நிரூபிக்கும்**

**திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் சுழற்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வாக்குச் செலுத்துவதற்கான நுழைவுப் புள்ளிகள்**

| | |
|---|---|
| வரவு செலவுத் திட்ட உருவாக்கம் | 1. பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் பாலின ஒப்புறவு மற்றும் சமத்துவம் தொடர்பான தெரிவுக் குழு உறுப்பினர்கள் சக பாராாளுமன்ற உறுப்பினர்களிடையே விலக்கு மற்றும் பாலின பாகுபாடு பற்றிய பிரச்சனைகள் பற்றிய பகுப்பாய்வு மற்றும் உரையாடலை இலகுபடுத்தலாம் மற்றும் வருடாந்திர திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்ட செயல்முறை மூலம் குறிப்பிட்ட கவனம் மற்றும் வள ஒதுக்கீடு தேவைப்படும் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தலாம். |
| | 2. பாராாளுமன்ற உறுப்பினர்கள் சிவில் சமூகத்துடன் இணைந்து, புறக்கணிப்பு மற்றும் சமத்துவமின்மை பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து, கள நிலைமை குறித்த தகவல்/ பகுப்பாய்வு மற்றும் மூலோபாய தலையீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| | 3. பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்தந்த அமைச்சு/இராஜாங்க அமைச்சு ஊழியர்களுக்கு துறைசார் பாலின பகுப்பாய்வு/ அநீதிகளை விளைவித்த விலக்குகள் மற்றும் பாகுபாடுகள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொணடு அவற்றின் மூலம் பெறப்படும் உள்ளீடுகளை ஆண்டுத் திட்ட உருவாக்கத்தில் பயன்படுத்துமாறு அறிவுறுத்தலாம். |
| | 4. பாராளுமன்ற உறுப்பினர்கள் பொது நிதிக் குழு மற்றும் பாலினம்/பெண்கள் மீதான தேர்வுக் குழு, மற்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினரகளின் ஒன்றியம் பாலின ஒப்புறவு மற்றும் சமத்துவம் தொடர்பான தெரிவுக் குழு ஆகியவற்றுடன் இணைந்து தேசியக் கொள்கை கட்டமைப்பின் உள்ளடக்கிய மற்றும் பாலின அர்ப்பணிப்பு பற்றிய உரையாடல் மற்றும் விளக்கங்கள் மூலம் பேரினப் பொருளாதாரக் கொள்கையில் செல்வாக்கு செலுத்த முடியும். |
| | 5. பாராளுமன்ற உறுப்பினர்கள் பாலின அறிக்கை மூலம் வரவு செலவுத் திட்ட அழைப்பில் செல்வாக்கு செலுத்தலாம் அல்லது தேசிய திட்டம் மற்றும் வரவுசெலவு செயற்பாட்டில் முக்கிய வழிகாட்டும் ஆவணமான வரவு செலவுத் திட்ட அழைப்பிற்கு பாலினம் சார்ந்த கூடுதல் சேர்க்கையை அறிமுகப்படுத்தலாம். (பாலினம்/பெண்கள் மீதான தேர்வுக் குழு, மற்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் பாலின ஒப்புறவு மற்றும் சமத்துவம் தொடர்பான தெரிவுக் குழு என்பவற்றின் உள்ளீடுகளுடன் தயாரிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சின் 2022 GRB சுற்றறிக்கைக்கான இணைப்பு 1 ஐப் பார்க்கவும்.) |
| | 6. அமைச்சர் பதவியை வகிக்கும் ஒவ்வொரு பாராாளுமன்ற உறுப்பினர் மற்றும் இராஜாங்க அமைச்சரும் முக்கிய நிகழ்ச்சித் திட்டங்கள்/செயல்பாடுகள்/ KPIகளை உருவாக்குவதில் துறைசார் கொள்கைகளின் பாலின நோக்கங்களைக் கடைப்பிடிக்குமாறு அந்தந்த அமைச்சகத்திற்கு அறிவுறுத்தலாம். |

7. அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவியை வகிக்கும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும், வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள GRB சுற்றறிக்கைகளை கடைபிடிக்குமாறு அந்தந்த அமைச்சக திட்டமிடல் பிரிவிற்கு அறிவுறுத்தலாம்.

8. அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டுதல் மீதான SDG 5 இன் குறிகாட்டிகள் மற்றும் பிற 14 இலக்குகளில் குறுக்கு வெட்டு பாலின குறிகாட்டிகளின் சாதனை அடைவுகளை அடைய வேண்டும்.

9. முந்தைய ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பாலின தாக்க மதிப்பீட்டை விசாரணைக்குட்படுத்தி, திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடுகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டறியவும்.

வரவு செலவுத் திட்ட ஒப்புதல்/ சரிபார்த்தல்

1. ஒதுக்கீட்டு சட்டமூலம் மற்றும் தொடர்புடைய மதிப்பீடுகளை உள்ளடக்கிய மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கும் கோணத்தில் ஆய்வு செய்து, துறை வாரியான மதிப்பீடுகளின் பாலின அறிக்கையைத் தயாரிக்கவும்.

2. வரவு செலவுத் திட்ட விவாதத்தில் தீவிரமாக பங்கேற்று, வெவ்வேறு அமைச்சக வரவு செலவுத் திட்டங்களில் பாலின ஒருங்கிணைப்பு/ விலக்குகளில் உள்ள இடைவெளிகளை சுட்டிக்காட்டவும்.

3. பெண் தொழிலாளர் பங்கேற்பு, SGBV, வளங்களின் சமத்துவமற்ற பங்கீடு, வணிகங்களில் உள்ள பெண்கள் மீதான கவனக்குறைவு, சமத்துவமற்ற அதிகாரப் பகிர்வு போன்ற பாலின ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதில் உள்ள குறிப்பிடத்தக்க இடைவெளிகளை சுட்டிக்காட்டவும்.

4. துறைக்குள் பாரபட்சமான இடைவெளியாக அங்கீகரிக்கப்பட்ட பெண்களின் நன்மைகள் மற்றும் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கான போதுமான ஒதுக்கீடுகளுக்காகப் பரிந்துரைக்கவும்

5. சிறந்த நடைமுறைகளாக பாலின மாற்ற மேம்பாட்டு முயற்சிகளை சுட்டிக்காட்டவும்.

6. ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை உள்ளடக்கிய மற்றும் பாலினப் பதிலளிப்புக் கோணத்தில் ஆராய்வதற்கு சிவில் சமூகம் மற்றும் ஆய்வாளர்களுடன் தொடர்பு கொண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தில் அவர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கவும்

வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுதல்

1. பாராளுமன்ற உறுப்பினர்கள் துறைசார்ந்த அமைச்சுக்களில் செல்வாக்கு செலுத்தி வருடாந்த திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களை பாரபட்சமற்ற முறையில் மற்றும் எந்தவிதமான முறைகேடுகள்/ஊழல்களுமின்றி செயல்படுத்த முடியும்.

2. மக்களிடம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலைப் பேணுமாறு செயல்படுத்தும் முகவர்/அமைச்சுகள் மற்றும் துணை தேசிய கட்டமைப்புகளை ஊக்குவித்தல்.

3. திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்ட நடைமுறைப்படுத்தல்களின் அனைத்து காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளிலும் IGRB இன் முன்னேற்றம் குறித்த தனிப் பிரிவிற்காக பரிந்துரைத்தல்

4. அனைத்து நிறுவனங்களும் பாலின-பிரிவுபடுத்தப்பட்ட தரவுகளைப் பராமரிப்பதை உறுதி செய்தல்

5. திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பில் மக்களின் பங்களிப்பை ஊக்குவித்தல்

மதிப்பீடு செய்தல் மற்றும் தணிக்கை

1. வெளி நிறுவனங்களின் தொழில்நுட்ப உள்ளீட்டைக் கொண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தின் பாலின தணிக்கை/பாலின தாக்க மதிப்பீட்டை நடாத்த அழைப்பு விடுப்பதுடன் மற்றும் முடிவுகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கவும்.

2. அடுத்த வரவு செலவுத் திட்ட அழைப்பில் மதிப்பீட்டு அறிக்கையின் கண்டுபிடிப்புகளை இணைக்க MoF உடன் தொடர்பு கொள்ளுங்கள்

பெண்கள் தொடர்பில் கனடாவின் நிலை – 2009 ஆம் ஆண்டில் கனேடிய பாராளுமன்றத்தில் உள்ள பெண்களின் நிலைக் குழுவானது GRB உட்பட பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான இந்தப் பரிந்துரைகளை வழங்கியது

<u>நிலைக்குழுவின் அறிக்கையின் சில பகுதிகள்: 40வது பாராளுமன்றம்: 2வது அமர்வு.</u>

**பரிந்துரை 25**

பாலின சமத்துவத்திற்கான ஆணையாளர் அலுவலகத்தை கனடா அரசாங்கம் உருவாக்கி, டிசம்பர் 2009க்குள் பாலின சமத்துவத்திற்கான ஆணையாளரை நியமிக்க வேண்டும் என்று குழு பரிந்துரைக்கின்றது உத்தியோகபூர்வ மொழிகள் ஆணையாளரின் மாதிரியின் அடிப்படையில் இந்த ஆணையாளர் பாராளுமன்றத்தின் அதிகாரியாக நியமிக்கப்படுவார்; மற்றும் ஆணையாளர் தனது ஆணையை நிறைவேற்றத் தேவையான அனைத்து வளங்களும் வழங்கப்பட வேண்டும்.

**பரிந்துரை 26**

பாலின சமத்துவத்திற்கான பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் குறித்த நிபுணர் குழுவின் பணியை உருவாக்கி, 2009 ஏப்ரல் மாதத்திற்குள் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்துமாறு குழுவானது கனடா அரசாங்கத்திடம் பரிந்துரைக்கிறது; கூட்டாட்சி துறைகள் மற்றும் முகவர்களின் பாலின வரவு செலவுத் திட்டப் பகுப்பாய்வு மற்றும் பாலின வரவு செலவுத் திட்டக் கடமைகளை இந்த சட்டம் அமைக்கிறது; இந்தச் சட்டம், உத்தியோகபூர்வ மொழி ஆணையாளர் அலுவலக மாதிரியின் அடிப்படையில் பாலின சமத்துவத்திற்கான ஆணையாளர் அலுவலகத்தை உருவாக்குகிறது; பாலின சமத்துவத்திற்கான ஆணையர் அலுவலகத்தின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை இந்தச் சட்டம் தெளிவாகக் குறிப்பிடுகிறது; மேலும இந்த சட்டம் கனடாவின் பெண்களின் நிலையின் வகிபங்குகள் மற்றும் பொறுப்புகளை வரையறுக்கிறது.

**பரிந்துரை 27**

அமைச்சரவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பாலின அடிப்படையிலான பகுப்பாய்வில் பயிற்சி அளிப்பதை உறுதி செய்வதன் மூலம் தலைமைத்துவத்தை வெளிப்படுத்துமாறு கனடா பிரதமரை குழுவானது ஊக்குவிக்கிறது மற்றும் கனடாவின் அடுத்த உரையில் பாலின சமத்துவத்திற்கான கனடா அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**பாலின-பதிலளிப்பு-வரவு செலவுத் திட்டம் மற்றும் பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதில் சட்டமன்றத்தை ஈடுபடுத்துவதில் கனடா சில முன்னோடியான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவர்களின் பாராளுமன்ற முறைமை, குறிப்பாக மேற்பார்வை தொடர்பில் அது இலங்கையின் நடைமுறைகளைப் போலவே போதுமானதாக உள்ளது மற்றும் இலங்கையிலும் பெண்களுக்கான தெரிவுக்குழுவால் ஏற்றுக் கொள்ளக்கூடிய கண்காணிப்புப் பாத்திரத்தைப் பற்றி நன்றாகப் பேசுகிறது. பாலின சமத்துவ விளைவுகளை வலுப்படுத்த அவர்கள் நிர்வாகத்துடன் ஈடுபடுவது கூட தழுவலுடன் பிரதிபலிப்பதற்காகக் கற்றுக்கொள்வது சிறந்தது**

## அலகு நான்கு: பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடலின் ஊடாக நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் பாலின சமத்துவத்தை அடைந்து கொள்ளல்.

SDG 2030 செயல்நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் SDGகளை அடைவதற்கு இலங்கை உறுதி எடுத்துள்ளது. மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உழைக்கும் அரசாங்க அமைப்புக்களைக் கண்காணித்து மதிப்பீடு செய்யும் அர்ப்பணிப்புள்ள ''இலங்கையின் நிலையான அபிவிருத்தி சபை'' என்ற நிறுவனத்தை அமைத்துள்ளது. இது ஐக்கிய நாடுகள் சபைக்கு (ஐ.நா) இணங்க இலங்கையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகளாவிய உறுதிமொழிகள் மற்றும் நிலைபேறான சுற்றுச்சூழல் தரநிலைகளுக்கு இணங்க, தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்தின் வெற்றியை உறுதி செய்வதற்காக, இலங்கையின் நிலையான வளர்ச்சியின் அபிவிருத்தியைத் தொடர்ந்து இலகுபடுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்வதை நிலையான அபிவிருத்தி சபையானது தமது நோக்கமாகக் கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை நிலையான அபிவிருத்தி சட்டமானது, இலங்கையில் SDGகளை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட மற்றும் கொள்கை வழிகாட்டலை வழங்குகின்றது.

நிலையான அபிவிருத்திக்கான 2030 செயல்நிரல் அனைத்து ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளினாலும் 2015இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உலகளாவிய இலக்குகள் என்று அழைக்கப்படும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs), வறுமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், பூமியைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அனைத்து மக்களும் அமைதி மற்றும் செழுமையை அனுபவிக்கின்றார்களா என்பதை உறுதி செய்வதற்குமான ஒரு உலகளாவிய அழைப்பாகும்.

மூன்று முக்கிய பகுதிகள்: பொருளாதார வளர்ச்சி, சமூக உள்ளடக்கல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பன ஒன்றுடன் ஒன்று சார்ந்தன மற்றும் அவை ஒன்றாகக் கையாளப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதற்கு, செயல்நிரல் 2030 ஆனது 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) முன்வைக்கின்றது. இந்த 17 இலக்குகளும் ஏனைய முன்னுரிமைகளுக்கு மத்தியில் பருவநிலை மாற்றம், பொருளாதார சமத்துவமின்மை, புத்தாக்கம், நிலைபேறான நுகர்வு, சமாதானம் மற்றும் நீதி ஆகிய புதிய பகுதிகளையும் உள்ளடக்குகின்ற அதேவேளை புத்தாயிரமாண்டு வளர்ச்சிக் குறிக்கோள்களின் (Millennium Development Goals) வெற்றியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இலக்குகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை – பெரும்பாலும் வெற்றிக்கான திறவுகோல் ஒன்றானது பொதுவாக மற்றொன்றுடன் தொடர்புபட்ட சிக்கல்களை சமாளிக்கும் திறனை உள்ளடக்கியது..

SDGகளுக்கு முக்கியமான 5 Pகள் உள்ளன:

People - Planet – Prosperity – Peace- Partnership
மக்கள் - பூமி - செழிப்பு - அமைதி - கூட்டணி




| | |
|---|---|
| இலக்கு 1 | அனைத்து இடங்களிலும், அனைத்து வகைகளிலுமான ஏழ்மையை ஒழிக்க வேண்டும். |
| இலக்கு 2 | பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பையும் மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டையும் எய்துதல், மற்றும் வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவித்தல் |
| இலக்கு 3 | எல்லோருக்கும், எல்லா வயதிலும், நலம் குன்றா உயிர்வாழ்வை உறுதி செய்தல் |
| இலக்கு 4 | எல்லோருக்கும், எல்லா வயதிலும், நலம் குன்றா உயிர்வாழ்வை உறுதி செய்தலும், எல்லோருக்கும் எல்லா வயதிலும் நல்வாழ்வை முன்னெடுத்தலும் |
| இலக்கு 5 | பாலின சமத்துவம் அடைதல், மற்றும் அனைத்து பெண்கள் சிறுமிகளுக்கும் அதிகாரமளித்தலும் |
| இலக்கு 6 | எல்லோருக்கும் நீரும் துப்பரவும் கிடைக்கச் செய்தலும், அவற்றை நீடிக்கத் தக்கவாறு சுகாதாரத்தின் நிலையான மேலாண்மை செய்தலும் |
| இலக்கு 7 | எல்லோருக்கும் மலிவான, நம்பகமான, நிலையான மற்றும் புதுமையான முறை ஆற்றல் (எரிசக்தி) கிடைப்பதை உறுதி செய்து கொள்ளல் |
| இலக்கு 8 | எல்லோருக்கும் நிலையான, யாவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான, நீடிக்கத்தகு பொருளாதார வளர்ச்சி, முழுமையான, ஆக்கவளம் கொண்ட, கண்ணியமான பணி |
| இலக்கு 9 | தாங்கும் திறன் கொண்ட உட்கட்டமைப்புக்களை உருவாக்குதல், உள்ளடக்கிய மற்றும் வளங்குன்றாத் தொழில்மயமாதலை முன்னெடுத்தல், புதுமையாக்கத்தைப் பேணி வளர்த்தல் |
| இலக்கு 10 | நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கிடையேயுமான சமமின்மையை, சமத்துவமின்மையைக் குறைத்தல் |

| | |
|---|---|
| இலக்கு 11 | நகரங்களையும், மனித சமூகங்களையும், குடியிருப்புக்களையும் எல்லோரையும் உள்ளடக்கிய, பாதுகாப்பானதாக, தாங்கும் திறன்கொண்ட, நீடிக்கத் தக்கனவாக ஆக்குதல் |
| இலக்கு 12 | நிலையான, நீடிக்கத்தகு முறையிலான நுகர்வு மற்றும் உற்பத்தியை, உற்பத்தி வடிவங்களை உறுதி செய்து கொள்ளுதல் |
| இலக்கு 13 | காலநிலை மாறுபாட்டையும் அதன் பாதிப்புக்களையும் எதிர்கொள்ளக் கூடிய வகையிலான உடனடி நடவடிக்கைகளை எடுத்தல் |
| இலக்கு 14 | பெருங்கடல்கள், கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களைப் பேணுதலும், வளங்குன்றா வளர்ச்சிக்காக அவற்றை நீடிக்கத் தகுந்த விதத்தில் பயன்படுத்துதலும் |
| இலக்கு 15 | நில சூழலியல் அமைப்புக்களைப் பாதுகாத்து, மீட்டமைத்து, அவற்றின் நீடித்த பயன்பாட்டை ஊக்குவித்தல், நீடிக்கத் தக்கவாறு காடுகளை நிலைப்பாடான முறையில் நிர்வகித்தல், பாலைவனமாதலுக்கு எதிராகப் போரிடல், நிலச் சீர்கேட்டைத் தடுத்து மீட்டமைத்தல், மற்றும் பல்லுயிர் இழப்பைத் தடுத்து நிறுத்துதல் |
| இலக்கு 16 | நிலையான, வளங்குன்றா வளர்ச்சிக்காக அமைதியான, யாவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குதல், அனைவருக்கும் நீதி கிடைக்கச் செய்தல், எல்லா நிலைகளிலும் சிறப்பான, பொறுப்பான மற்றும் உள்ளடக்கிய சூழல்களை உருவாக்குதல், செயல்திறமிக்க, பதிலளிக்கும் பொறுப்புடைய, யாவரையும் உள்ளடக்கிய நிறுவனங்களை எல்லா மட்டங்களிலும் ஏற்படுத்துதல் |
| இலக்கு 17 | நிலையான அபிவிருத்திக்காக செயற்பாட்டு முறைகளைப் பலப்படுத்துதல், வளங்குன்றா வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டமைப்புகளுக்கு புத்துயிர் அளித்தல |

17 குறிக்கோள்களின் கீழ் 169 இலக்குகள் உள்ளன. குறிப்பாக பாலின சமத்துவம் தொடர்பில் 9 இலக்குகளைக் கொண்ட SDG 5 காணப்படுகின்றது. மேலும் இந்த 14 இலக்குகளின் கீழ் 80 குறிகாட்டிகளுடன் பாலினமானது 14 SDGகளையும் குறுக்கிடுகின்றது. அனைத்து குறிகாட்டிகளிலும் 34% ஆனவை பாலினம் சார்ந்தன மற்றும் 21% ஆனவை பாலினத்தால் வகுக்கப்பட்டவை ஆகும்.

நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் பாலின சமத்துவம்

நிலையான அபிவிருத்தி இலக்கு 5 (SDG 5) ஆனது பாலின சமத்துவத்தை அடைந்து கொள்வதற்கும் மற்றும் அனைத்துப் பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுவதற்கும் முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது SDG 5 ஆனது பாலின சமத்துவத்தை மூலோபாய ரீதியாக ஊக்குவிக்கக்கூடியதும் மற்றும் நாட்டிலுள்ள முக்கியமான பாலின சமத்துவமின்மைகளை நிவர்த்தி செய்யக்கூடியதுமான 9 இலக்குகளையும் 14 சுட்டிகள்/குறிகாட்டிகளையும் கொண்டுள்ளது. SDG 5 இலக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியன:

| இலக்குகள் | சுட்டிகள்/குறிகாட்டிகள் |
|---|---|
| இலக்கு 5.1 அனைத்து இடங்களிலும் உள்ள அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவருதல் | சுட்டி 5.1.1: பால் அடிப்படையில் சமத்துவம் பாகுபாடின்மையை ஊக்குவிக்கவும், செயற்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் சட்டக் கட்டமைப்புக்கள் காணப்படுகின்றனவா அல்லது இல்லையா |
| இலக்கு 5.2 கடத்தல் மற்றும் பாலியல் மற்றும் பிற வகையான சுரண்டல்கள் உட்பட பொது மற்றும் தனியார் துறைகளில் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருதல் | சுட்டி 5.2.1: வன்முறையின் வடிவம் மற்றும் வயதின் அடிப்படையில், கடந்த 12 மாத காலப்பகுதியில் தற்போதைய அல்லது முன்னால் வாழ்க்கைத் துணையினால் உடலியல், பாலியல் அல்லது உளவியல் வன்முறைகளுக்கு ஆளான 15 அல்லது அதற்கு மேற்பட்ட வயதை உடைய திருமணமான பெண்கள் மற்றும் சிறுமிகளின் விகிதம்<br><br>சுட்டி 5.2.2: வயது மற்றும் நிகழ்ந்த இடம் என்பவற்றின் அடிப்படையில், கடந்த 12 மாத காலப்பகுதியில் கணவர் தவர்ந்த பிற நபர்களினால் பாலியல் வன்முறைக்கு ஆளான 15 அல்லது அதற்கு மேற்பட்ட வயதை உடைய பெண்கள் மற்றும் சிறுமிகளின் விகிதம் |
| இலக்கு 5.3 குழந்தை, இளவயது மற்றும் கட்டாயத் திருமணங்கள் மற்றும் பெண் பிறப்புறுப்பு சிதைவு போன்ற அனைத்து தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளையும் இல்லாதொழித்தல் | சுட்டி 5.3.1: 15 வயதிற்கு முன்னர் மற்றும் 18 வயதிற்கு முன்னர் திருமணமான அல்லது ஒரு பந்தத்தில் இருந்த 20-24 வயதுகளை உடைய பெண்களின் விகிதம்<br><br>சுட்டி 5.3.2: வயதின் அடிப்படையில், பெண் பிறப்புறுப்பு சிதைவு/ வெட்டுதலுக்கு ஆளான 15-49 வயதிற்குட்பட்ட சிறுமிகள் மற்றும் பெண்களின் விகிதம் |
| இலக்கு 5.4 பொதுச் சேவைகள், உட்கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதனூடாக ஊதியமற்ற வீட்டு மற்றும் பராமரிப்பு வேலைகளை மதித்தல் மற்றும் அவற்றுக்கு அங்கீகாரமளித்தல் மற்றும் குடும்பம் மற்றும் வீட்டிற்குள் பகிரப்படும் பொறுப்புக்களை தேசிய அளவில் பொருத்தமானதாக ஊக்குவித்தல். | சுட்டி 5.4.1: பாலினம், வயது, மற்றும் இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊதியமற்ற வீட்டு மற்றும் பராமரிப்பு வேலைகளில் செலவிடப்பட்ட நேரத்தின் விகிதம். |
| இலக்கு 5.5 அரசியல், பொருளாதாரம் மற்றும் பொது வாழ்வில் முடிவுகளை மேற்கொள்ளும் அனைத்து மட்டங்களிலும் தலைமைத்துவத்திற்கான பெண்களின் முழுமையான மற்றும் பயனுள்ள ஈடுபாட்டையும் மற்றும் சமமான வாய்ப்புக்களையும் உறுதிப்படுத்துதல் | சுட்டி 5.5.1: தேசிய பாராளுமன்றங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களினால் வைத்திருக்கப்படும் ஆசனங்களின் விகிதம்<br><br>சுட்டி 5.5.2: நிர்வாகப் பதவிகளில் பெண்களின் வீதம் |

| இலக்குகள் | சுட்டிகள்/குறிகாட்டிகள் |
|---|---|
| இலக்கு 5.6 மக்கள் தொகை மற்றும் மேம்பாட்டிற்கான சர்வதேச மாநாட்டின் செயல்திட்டம் மற்றும் செயற்பாடுகளுக்கான பெய்ஜிங் பிரகடணம் மற்றும் அவற்றின் ஆய்வு மாநாடுகளின் விளைவு ஆவணங்கள் என்பவற்றின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்டதற்கு ஏற்ப பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் இனப்பெருக்க உரிமைகளுக்கான உலகளாவிய அணுகலை உறுதி செய்தல் | சுட்டி 5.6.1: பாலியல் உறவுகள், கருத்தடைப் பயன்பாடு மற்றும் இனப்பெருக்க சுகாதாரப் பராமரிப்பு தொடர்பில் தங்களுடைய சுயமான தகவலறிந்த முடிவுகளை மேற்கொள்ளும் 15-49 வயதிற்குட்பட்ட பெண்களின் விகிதம்<br><br>சுட்டி 5.6.2: 15-49 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரப் பராமரிப்பு, தகவல்கள் மற்றும் கல்வி என்பவற்றுக்கான அணுகலை உறுதி செய்யும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை |
| இலக்கு 5.a தேசிய சட்டங்களின் படி, பொருளாதார வளங்களுக்கான சம உரிமைகளைப் பெண்களுக்கு வழங்குவதற்கும், அத்துடன் நிலம் மற்றும் ஏனைய வகையான சொத்துக்கள், நிதிச் சேவைகள், பரம்பரை மற்றும் இயற்கை வளங்களின் மீதான உரிமை மற்றும் கட்டுப்பாட்டிற்கான அணுகலை வழங்குவதற்குமான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் | சுட்டி 5.a.1:<br><br>(a) பாலினத்தின் அடிப்படையில் விவசாய நிலத்தின் மீது உரிமை அல்லது பாதுகாப்பான உரிமைகள் கொண்ட மொத்த விவசாய மக்கள் தொகையின் விகிதம்; மற்றும்<br><br>(b) விவசாய நிலத்தின் உரிமையாளர்கள் அல்லது உரிமைகள் தாங்குபவர்கள் மத்தியில் பெண்களின் பங்கு, நிலத்தின் வகை<br><br>சுட்டி 5.a.2: பெண்களுக்கு நில உரிமை மற்றும்/ அல்லது கட்டுப்பாட்டில் சம உரிமைகளை உறுதி செய்யும் சட்ட கட்டமைப்பைக் (தேசவளமை சட்டம் உட்பட) கொண்ட நாடுகளின் விகிதம் |
| இலக்கு 5.b பெண்களின் வலுவூட்டலை ஊக்குவிப்பதற்கு உகந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகரித்தல், குறிப்பாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை ஊக்குவித்தல் | சுட்டி 5.b.1: பாலின் அடிப்படையில், கையடக்கத் தொலைபேசி ஒன்றை வைத்திருக்கும் தனிநபர்களின் விகிதம் |
| இலக்கு 5.c பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் மற்றும் அனைத்து மட்டங்களிலும் உள்ள அனைத்துப் பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுப்படுத்துவதற்குமான சிறந்த கொள்கைகளையும் மற்றும் செயற்படுத்தக்கூடிய சட்டங்களையும் ஏற்றுக் கொண்டு அவற்றை வலுப்படுத்துதல் | சுட்டி 5.c.1: பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் வலுப்படுத்தல் என்பவற்றுக்கான பொது ஒதுக்கீடுகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கான முறைமைகளைக் கொண்ட நாடுகளின் விகிதம் (பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்பான சுட்டி) |

2020 கோவிட்-19 நோய்ப்பரவலினைத் தொடர்ந்து நிலையான அபிவிருத்தி இலக்குகள்[2] முழுவதுமான உலகளாவிய பாலின சமத்துவத்தின் விரைவான பார்வை

| | |
|---|---|
| 1 NO POVERTY | கோவிட்-19 நோய்ப்பரவலானது தீவிர வறுமையின் மீள் எழுச்சியை ஏற்படுத்துகின்றது, இது பெண்களை அதிகம் பாதிக்கின்றது. 2021ஆம் ஆண்டளவில், சுமார் 435 மில்லியன் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஒரு நாளைக்கு $1.90 இற்கும் குறைவான வருமானத்தில் வாழ்வார்கள் —கோவிட்-19 இன் காரணமாக வறுமைக்குத் தள்ளப்பட்ட 47 மில்லியன் நபர்கள் உட்பட |
| 2 ZERO HUNGER | உலகளாவிய ரீதியாக, தீவிர உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்ளும் ஆண்களை விட பெண்களுக்கு 27% உயர் ஆபத்து காணப்படுகின்றது. நோய்ப்பரவலினைத் தொடர்ந்து இந்த பாலின இடைவெளியானது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது |
| 3 GOOD HEALTH AND WELL-BEING | பெண் சுகாதாரப் பணியாளர்கள் கோவிட்-19 நோய்ப்பரவலின் முன்களப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றார்கள் மற்றும் வைரஸினால் பாதிக்கப்படக்கூடிய உயர் ஆபத்து நிலைகளிலும் காணப்படுகின்றனர். கிடைக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையில், ஐந்து நாடுகளில் பாதிக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களில் 72% ஆனோர் பெண்களாவர். |
| 4 QUALITY EDUCATION | பாடசாலைகளின் பூட்டானது கல்வியில் பாலின இடைவெளிகள் அதிகரிப்பதற்கு வாய்ப்பாக உள்ளது. 11 மில்லியனுக்கும் அதிகமான சிறுமிகள் – முன் தொடக்கப் பள்ளி முதல் மூன்றாம் நிலைக் கல்வி வயது வரை – 2020 ஆம் ஆண்டில் பாடசாலைகளுக்குத் திரும்பாத அபாயம் உள்ளது. |
| 5 GENDER EQUALITY | 15 முதல் 49 வரையிலான வயதிற்குட்பட்ட 243 மில்லியன் பெண்கள் மற்றும் சிறுமிகள் முந்தைய ஆண்டில் தங்களுடைய நெருக்கமான துணையினால் பாலியல் மற்றும்/ அல்லது உடலியல் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர்.<br><br>குறைந்தது 200 மில்லியன் பெண்கள் மற்றும் சிறுமிகள் பெண் பிறப்புறுப்புச் சிதைப்புக்கு (FGM) உட்படுத்தப்பட்டுள்ளனர், இந்த நடைமுறை செறிவாகக் காணப்படும் 31 நாடுகளில் இருந்தான சமீபத்திய தரவுகளின்படி.<br><br>20 முதல் 24 வயதுடைய 5 பெண்களில் ஒருவருக்கு குழந்தைப் பருவத்தில் திருமணம் நடக்கின்றது. தொற்றுநோய் தாக்குவதற்கு முன்பு குழந்தை திருமணம் மற்றும் FGM ஆகியவை கீழ்நோக்கிய பாதையில் இருந்தன. இருப்பினும், பொருளாதார நெருக்கடி மற்றும் பள்ளி இடையூறுகள் முன்னேற்றத்தைத் தடுக்கலாம். ஊதியமில்லாத பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளில் பெண்கள் ஒவ்வொரு நாளும் ஆண்களைப் போல 3 மடங்கு பல மணிநேரம் செலவிடுகிறார்கள். கோவிட்-19 பெண்களின் ஊதியம் இல்லாத பராமரிப்பு பணிச்சுமையை அதிகரிக்கிறது.<br><br>உலகளவில், 4 பாராளுமன்றத் தொகுதிகளில் 1 பெண்களால் நடாத்தப்படுகிறது. உள்ளூர் மட்டத்தில், உள்ளூர் அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் 36% பெண்கள் உள்ளனர். |
| 6 CLEAN WATER AND SANITATION | உலகெங்கிலும் உள்ள 10 பாடசாலைகளில் 4 பாடசாலைகளும், மற்றும் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள 70% பாடசாலைகளும் மாணவர்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகளை வழங்குவதில் சவால்களை எதிர்கொள்கின்றன. சில நாடுகளில், 150 அல்லது அதற்கு மேற்பட்ட பாடசாலை மாணவிகள் ஒரே கழிவறையைப் பகிர்ந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| 7 AFFORDABLE AND CLEAN ENERGY | சுத்தமான சமையல் எரிபொருட்கள் இல்லாமையானது, 2016 ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் சிறுமிகளிடையே கிட்டத்தட்ட 2 மில்லியன் அகால மரணங்களுக்குக் காரணமாக இருந்துள்ளது. |

2 நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான முன்னேற்றம்- பாலின விரைவுப் பார்வை 2020. ஐ.நா பெண்கள் வெளியீடு

**10 REDUCED INEQUALITIES**

இயலாமை உடைய பெண்கள் பலவிதமான பாகுபாடுகளை எதிர்கொள்கின்றனர். 2014 மற்றும் 2019 க்கு இடையில் 10 இயலாமை உடைய பெண்கள் மற்றும் ஆண்களில் 3 பேர் தனிப்பட்ட முறையில் குறைந்தபட்சம் ஒரு வகையான பாகுபாட்டை அனுபவித்துள்ளனர்.

**8 DECENT WORK AND ECONOMIC GROWTH**

வீட்டுப் பணியாளர்கள் மற்றும் முறைசாரா பொருளாதாரத்தில் பணிபுரிபவர்கள் குறிப்பாக தொற்றுநோயால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 72% வீட்டுப் பணியாளர்கள், அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், வேலை இழப்பு அல்லது குறைக்கப்பட்ட வேலை மணிநேரங்களினால் அவதிப்படுகின்றனர்.

**9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE**

தொற்றுநோய் காரணமாக உற்பத்தித் துறை பெரும் வேலை இழப்பையும் பொருளாதார உற்பத்தியில் சுருக்கத்தையும் சந்தித்துள்ளது. பெண்கள் அந்தத் துறையில் பாதிக்கப்படக்கூடிய வேலைவாய்ப்பில் இருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது மற்றும் அவர்களின் உற்பத்தி வேலைகள் அல்லது வாழ்வாதாரங்களை இழக்கும் அபாயம் அதிகம் உள்ளது

**12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION** | **13 CLIMATE ACTION** | **14 LIFE BELOW WATER** | **15 LIFE ON LAND**

பெண்கள் மற்றும் சிறுமிகள் அதிகரித்து வரும் காலநிலை தொடர்பான பேரழிவுகளின் சுமைகளை சுமக்கிறார்கள், ஆனால் மாற்றத்தை ஏற்படுத்தும் நிலையில் அரிதாகவே உள்ளனர். ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டின் COP 25 இல், பிரதிநிதிகளின் தலைவர்களில் மட்டுமே பெண்கள் இருந்தனர்

**11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES**

பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொது போக்குவரத்து ஏழை நகர்ப்புற பெண்களுக்கு உயிர்நாடியாக இருக்கலாம், ஆனால் பல நகர்ப்புற அமைப்புக்களில் அணுகல் போதுமானதாக இல்லை. 2019 இன் தரவுகளின்படி, 50% மக்கள் மட்டுமே பொதுப் போக்குவரத்திற்கு வசதியான அணுகலைப் பெற்றுள்ளனர்.

**16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS**

பெண்கள் தலைமையிலான நாடுகளில், கோவிட்-19 இலிருந்து உறுதிப்படுத்தப்பட்ட இறப்புகள் ஆறு மடங்கு குறைவாக உள்ளன.

அதேபோன்று, சமாதான முன்னெடுப்புகளில் பெண்களின் நேரடிப் பங்கேற்பு, நீடித்த உடன்படிக்கைகளுக்கான பலப்படுத்தும் பகுதியாகவே காட்டப்பட்டுள்ளது. ஆயினும்கூட, 1992 மற்றும் 2019 க்கு இடையில், அமைதி செயல்முறைகளில் பெண்கள் 6% மத்தியஸ்தர்கள், 6% கையெழுத்துதாரர்கள் மற்றும் 13% பேச்சுவார்த்தையாளர்களாக மட்டுமே இருந்தனர்.

**17 PARTNERSHIPS FOR THE GOALS**

உலகளவில், 4.1 பில்லியன் மக்கள் இப்போது ஆன்லைனில் உள்ளனர், ஆனால் 58% ஆண்களுடன் ஒப்பிடும்போது, உலகின் பெண் மக்கள் தொகையில் 48% மட்டுமே இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். சில வளரும் பிராந்தியங்களில் அந்த பாலின இடைவெளி அதிகரித்து வருகிறது.

## அலகு ஐந்து: தேசிய கொள்கைக் கட்டமைப்பு மற்றும் பாலின சமத்துவத்திற்கான ஏற்பாடுகள்

2022 பட்ஜெட் அழைப்பில் கூறப்பட்டுள்ள படி, தேசிய திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத் திட்ட செயல்முறைக்கு வழிகாட்டும் தேசிய கொள்கைக் கட்டமைப்பின் நோக்கத்திற்கு 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' உதவுகின்றது. இந்தக் கொள்கையானது ''ஒரு ஆக்கபூர்வமான குடிமகன், மகிழ்ச்சியான குடும்பம், ஒரு ஒழுக்கமான சமூகம் மற்றும் வளமான நாடு'' என்ற நோக்கத்தைக் கொண்டுள்ளது. தேசிய கொள்கைக் கட்டமைப்பில் பத்து முக்கிய கொள்கைகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. மற்றும் பாலின சமத்துவம் குறிப்பாக,[i.] ஒரு ஆக்கபூர்மான குடிமகனின் கொள்கைகள் மற்றும் சுறுசுறுப்பான மனிதவளம். [ii.]மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார வளச்சி, [iii.]ஒழுக்கம், சட்டத்தை மதிக்கும் மற்றும் மரியாதை அடிப்படையிலான சமூகம், ஆகிய கொள்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கைக் கட்டமைப்பானது SDGகளை முக்கிய அபிவிருத்தி இலக்குகளாக நிலைநிறுத்துகின்றது. மற்றும் அதை அடைவதற்கும் முன்னுரிமை அளிக்கின்றது. இலங்கை உலக மகிழ்ச்சி சுட்டெண்ணில் (தற்போது இலங்கை 149 நாடுகளில் 129வது இடத்தில் உள்ளது) முன்னிலையினை அடைவதற்கு உறுதி செய்யப்படுகின்றது.

நாட்டின் வளரச்சியில் பெண்களின் பங்களிப்பை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை தேசிய கொள்கை கட்டமைப்பாக 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' மிகத் தெளிவாக கோடிட்டுக் காட்டுகின்றது. இக்கொள்கையானது, தொழிலாளர் படையில் பெண்களின் முழு ஈடுபாட்டைப் பெறுவதற்கும் நாட்டின் பொருளாதார வளரச்சியில் உற்பத்தி ரீதியாக பங்கெடுப்பதற்கும் பல்வேறு உத்திகளை உள்ளடக்கியுள்ளது. (தேசிய கொள்கைக் கட்டமைப்பின் பாலின பகுப்பாய்விற்கு இணைப்பு [III] ஐ பார்க்கவும்)

## இணைப்பு I: இலங்கையில் பாலின நிலை குறித்த புள்ளிவிவரவியல் கண்ணோட்டம்

| தரவின் வகை | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | | | 2019 | | |
| **உலகளாவிய குறியீட்டுத் தரவு** | | | | | | |
| மனித மேம்பாட்டுச் சுட்டெண்[vi] | 0.766 (தரநிலை 73/188) | 0.734 | 0.785 | 0.782 (தரநிலை 72/189) | 0.759 | 0.794 |
| பாலின சமத்துவமின்மைக் குறியீடு[vii] காட்டிகளுடன் | 0.386 (தரநிலை 87/188) | | | 0.401 (தரநிலை 90/189) | | |
| ▪ *தாய் இறப்பு விகிதம் (தலா 100, 000 உயிர்ப்பிறப்புகளுக்கு இறப்பு)* | 30 | | | 36 | | |
| ▪ *இளம்பருவ மகப்பேற்று விகிதம் (15-19 வயதிற்குட்பட்ட 1000 பெண்களில் மகப்பேற்று விகிதம்)* | 14.8 | | | 20.9 | | |
| ▪ *பெண்களினால் வைத்திருக்கப்படும் பாராளுமன்ற ஆசனங்களின் பங்கு* | | 4.9% | | 5.30% | | |
| ▪ *குறைந்தபட்சம் சில இடைநிலைக் கல்வி நிலைகளைக் கொண்ட மக்கள் தொகை (% 25 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்)* | 80.5 % | 80.2% | 80.6% | | 79.20% | 81.00% |
| ▪ *தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (% மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்)* | 53.80% | 35.9% | 74.7% | 52.30% | 35.40% | 74.60% |
| உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீடு (GGGI)[viii] | 0.686 (தரநிலை 84/145) | | | 0.680 (தரநிலை 102/153) | | |
| பாலின மேம்பாட்டுக் குறியீடு[ix], [x] சுட்டிகளுடன் 0.934 குழு | 3[xi]) | | | 0.955 (குழு 2) | | |
| ▪ *ஆயுட்காலம் ( வருடங்கள் )* | 75.0 | 78.4 | 71.3 | 77.0 | 80.3 | 73.6 |
| ▪ *பள்ளிப்படிப்பின் எதிர்பார்க்கப்படும் ஆண்டுகள் (வருடங்கள்)* | 14.0 | 14.3 | 13.6 | 14.1 | 14.5 | 13.8 |
| ▪ *பள்ளிப்படிப்பின் சராசரி ஆண்டுகள் (வருடங்கள்)* | 10.9 | 10.3 | 11.4 | 10.6 | 10.6 | 10.6 |
| ▪ *GNI தனிநபர் PPP $* | 10,789 | 6067 | 15,869 | 12,707 | 7433 | 18,423 |
| பெண்கள் அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீடு (WPS சுட்டி 2019/20) | 0.656 ( 2017-2018) | | | 0.679 * | | |
| **மக்கள் தொகை** | | | | | | |
| மக்கள் தொகை ( 1000s)[xii] (மதிப்பீடுகள்) | 20660 | 53.20% | 46.80% | 21803^ | 52% | 48% |
| சனத்தொகையின் வயதுப் பிரிவு (1000s) | | | | | | |
| 0-14 வருடங்கள் | 5289 | 2619 | 2670 | 5504 | | |
| 15- 64 வருடங்கள் | 14033 | 7260 | 6773 | 14589 | | |
| 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வருடங்கள் | 1648 | 938 | 710 | 1710 | | |

| தரவின் வகை | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | | | 2019 | | |
| பிறப்பில் பாலின விகிதம் | 1.04 | | | 1.04 | | |
| கருவுறுதல் வீதம் | 2.21 | | | 2.2 | | |
| பிறப்பின் போது ஆயுட்காலம் (வருடங்கள்) | 75 | 79.6 | 73.1 | 77 | 80.3 | 73.6 |
| குழந்தை இறப்பு வீதம் | 7 | 6.7 | 8.2 | 6.1 | 5.9 | 6.6 % |
| தோராயமான பிறப்பு வீதம் | 15.6 | | | 14.6 | 13.9 | 15.4 |
| தோராயமான இறப்பு வீதம் | 6.2 | | | 6.6 | 5.3 | 6.9 |
| இறப்புக்கள் | 130765 | | | 146053 | 62187 | 77311 |
| குடும்ப மக்கள் தொகை/ பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள்[xiii] (1000s) | 5437 | 74.20% | 25.80% | | | |
| **தொழிலாளர் படை**[xiv] | | | | | | |
| தொழிலாளர் படையில் பங்கேற்பு வீதம் %[xv] | 53.8 | 35.9 | 74.7 | 52.3 | 34.5 | 73 |
| வேலைவாய்ப்புப் பெற்ற (000) | 7948 | 2733 | 5097 | 8181 | 2811 | 5368 |
| வேளாண்மையில் | 27.10% | | | 25.30% | | |
| உற்பத்தித் துறையில் | 26.40% | | | 27.60% | | |
| சேவைகளில் | 46.50% | | | 47.10% | | |
| அரசாங்கத் துறை | 53.50% | | | 52.50% | | |
| மாகாண பொதுத் துறை | 29.30% | | | 30.30% | | |
| அரை-அரசாங்கத் துறை | 17.20% | | | 17.20% | | |
| பொருளாதார ரீதியில் செயற்படும் மக்கள் தொகை | 8214473 | 36% | 64% | 8592010 | 35.40% | 64.60% |
| பொருளாதார ரீதியில் செயற்படும் மக்கள் தொகை – நகர்ப்புறத் துறை | 1253519 | 33.10% | 66.90% | 1425479 | 35% | 65.00% |
| பொருளாதார ரீதியில் செயற்படும் மக்கள் தொகை – கிராமப்புறத் துறை | 6577732 | 36.10% | 63.90% | 6749448 | 35.10% | 64.90% |
| பொருளாதார ரீதியில் செயற்படும் மக்கள் தொகை – பெருந்தோட்டத் துறை | 383221 | 44.90% | 55.10% | 417083 | 41.50% | 58.50% |
| பொருளாதார ரீதியில் செயற்படாத மக்கள் தொகை [xvi] | 7067473 | 74.80% | 25.20% | 7832006 | 73.70% | 26.30% |
| பொருளாதார ரீதியில் செயற்படாத மக்கள் தொகை – நகர்ப்புறத் துறை | 1324940 | 72.90% | 27.10% | 1411397 | 72.80% | 27.20% |
| பொருளாதார ரீதியில் செயற்படாத மக்கள் தொகை – கிராமப்புறத் துறை | 5518880 | 75.40% | 24.60% | 6141938 | 74.20% | 25.80% |
| பொருளாதார ரீதியில் செயற்படாத் மக்கள் தொகை – பெருந்தோட்டத் துறை | 223652 | 71.80% | 28.20% | 278626 | 68.30% | 31.70% |
| பொருளாதார ரீதியாக செயலற்ற (காரணத்தின் அடிப்படையில்) | | | | | | |
| கல்வியில் ஈடுபட்டுள்ள | 20.30% | 14.00% | 38.90% | 21.20% | 14.60% | 39.20% |

| தரவின் வகை | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | | | 2019 | | |
| வீட்டுவேலைகளில் ஈடுபட்டுள்ள | 47.40% | 61.40% | 5.90% | 47.20% | 62.40% | 4.30% |
| ஓய்வூதியம் பெற்ற/ வயது முதிர்ந்த | 21.40% | 16.90% | 34.80% | 20.30% | 15.50% | 33.70% |
| உடல் நோயுற்ற/ இயலாமை உடைய | 7.1%% | 4.8% | 13.70% | 8.20% | 5.20% | 16.60% |
| வேறு | 3.80% | 2.8% | 6.80% | 3.30% | 2.30% | 6.10 % |
| வேலைவாய்ப்பின் அந்தஸ்தின் அடிப்படையில் வேலைவாய்ப்பிலுள்ள மக்கள் தொகை | | | | | | |
| ஊழியர் | 56.1% | 55.10% | 65.7% | 57.90% | 58.30% | 57.70% |
| பொது ஊழியர் | 15.1% | 19.3% | 12.8% | 14.90% | 19.90% | 12.20% |
| தனியார் ஊழியர் | 41.00% | 35.8% | 43.90% | 43.00% | 38.40% | 45.50% |
| முதலாளி | 3.10% | 1.1% | 4.2% | 2.60% | 0.80% | 3.50% |
| சொந்தக் கணக்குத் தொழிலாளர் | 32.20% | 26.9% | 73.1% | 32.50% | 24.80% | 36.50% |
| பங்களிக்கும் குடும்பப் பணியாளர் | 8.40% | 78.0% | 22.0% | 7.00% | 16.10% | 2.30% |
| **வேலைவாய்ப்பின்மை** | | | | | | |
| வேலைவாய்ப்பின்மை வீதம் | 4.7 | 7.2 | 3.0 | 4.8 | 7.4 | 3.3 |
| வேலைவாய்ப்பின்மை – தரம் 5 மற்றும் அதற்குக் கீழ் | 0.7 | 1.5 | 0.3 | 1.0 | 0.7 | 1.6 |
| வேலைவாய்ப்பின்மை - தரம் 6-10 | 3.4 | 5.4 | 2.6 | 3.30 | 2.90 | 4.50 |
| வேலைவாய்ப்பின்மை -GCE O/L | 6.4 | 9.0 | 5.1 | 3.3 | 4.5 | 2.9 |
| வேலைவாய்ப்பின்மை -GCE A/Lமற்றும் அதற்கு மேல் | 9.2 | 13.5 | 4.7 | 8.5 | 11.9 | 5.0 |
| இளைஞர் வேலைவாய்ப்பின்மை வீதம் | 20.8 | 27.4 | 16.6 | 21.5 | 28.7 | 17.6 |
| இளைஞர் வேலைவாய்ப்பின்மை தரம் 5 மற்றும் அதற்குக் கீழ் | 4.8 | | | 12.8 | | |
| இளைஞர் வேலைவாய்ப்பின்மை - தரம் 6-10 | 14.8 | | | 15.7 | | |
| இளைஞர் வேலைவாய்ப்பின்மை GCE O/L | 23.9 | | | 22.5 | | |
| இளைஞர் வேலைவாய்ப்பின்மை GCE A/ Lமற்றும் அதற்கு மேல் | 34 | | | 30.7 | | |
| கல்வி, வேலைவாய்ப்பு அல்லது தொழிற்பயிற்சியில் இல்லாத இளைஞர்கள் (NEET) | 734,550 | 510,049 | 224,501 | 647,009 | 445,820 | 202,043 |
| முறைசாரா துறைகளில் வேலைவாய்ப்பின் பங்களிப்பு % | 59.8 | 53.7 | 63.2 | 57.4 | 51.1 | 60.8 |
| முறைசார் துறைகளில் வேலைவாய்ப்பின் பங்களிப்பு % | 40.2 | 46.3 | 36.8 | 42.6 | 48.9 | 39.2 |
| திறமையான தொழிலாளர்களின் வேலைவாய்ப்பிற்கான வெளிநாட்டுப் பயணம் | 82098 | 5.70% | 94.30% | | | |
| வறுமை எண்ணிக்கை குறிகாட்டி[xvii] | 4.1 | | | 4.1 | | |
| பல-பரிமாண வறுமைக் குறியீடு[xviii] | | | | 0.011 (2.9%)in 2016 | | |

| தரவின் வகை | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | | | 2019 | | |
| தீவிரமான பல-பரிமாண வறுமையைக் கொண்ட மக்கள் தொகை[xix] | | | | 0.3% | | |
| **கல்வி** | | | | | | |
| 10 வருடங்களுக்கு மேல் எழுத்தறிவு வீதம்[xx] | 93.2% | 92.40% | 94.10% | 92.90% | 92.30% | 93.40% |
| கணனி எழுத்தறிவு [xxi] | | | | 30.8 | 28.9 | 32.9 |
| டிஜிட்டல் எழுத்தறிவு | | | | 46.0 | 42.6 | 49.7 |
| பாடசாலை உட்சேர்ப்பு – ஆரம்பக் கல்வி | 100% | 100.5% | 102.7% | 100.1% (2018) | 99.6% | 100.6% |
| பாடசாலை உட்சேர்ப்பு - இடைநிலைக் கல்வி | 97.6% (2016)[xxii] | 99.28% | 95.98% | 100% ( 2018) | 102% | 98.0% |
| தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை | 31,853 | 17470<br>54.8% | 14383<br>45.1% | 47,667 | 25,740<br>54% | 21926<br>46% |
| ALஇற்குத் தகுதி பெற்ற GCE O/L செயற்றிறன் (%)[xxiii] | 195,358 | 111,567<br>57.1% | 83,791<br>42.8% | 225539 | | |
| பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்ற GCE A/L செயற்றிறன் ( புதிய மற்றும் பழைய பாடத்திட்டம் ஆகிய இரண்டும்) | 131,137 | 84,448<br>64.3% | 46,689<br>35.6% | 181,126 | 118064<br>65.1% | 63062<br>34.8% |
| **கல்வித் திட்டத்தின் மூலம் இளங்கலைக்கான உட்சேர்ப்பு** | | | | | | |
| கலைப் பிரிவு | 9418 | 7742 | 1676 | 12,009 | 10147 | 1867 |
| வர்த்தகப் பிரிவு | 5793 | 3740 | 2053 | 7807 | 5199 | 2608 |
| பௌதீக விஞ்ஞானம் | 6023 | 1807 | 4216 | 7874 | 2607 | 5267 |
| உயிரியல் விஞ்ஞானம் | 7032 | 4807 | 2225 | 9805 | 6979 | 2826 |
| வேறு (ஒற்றைப் பாட சேர்க்கைகள்) | 324 | 142 | 182 | 545 | 238 | 307 |
| பொறியியற் தொழில்நுட்பம் | 1215 | 183 | 1032 | 2095 | 333 | 1762 |
| உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம் | 857 | 685 | 172 | 1506 | 1203 | 303 |
| மருத்துவம் | | | | 1967 | 1271 | 696 |
| சட்டத்துறை | | | | 493 | 420 | 73 |
| பல் மருத்துவம் | | | | 120 | 84 | 36 |
| கால்நடை மருத்துவம் | | | | 128 | 89 | 39 |
| விவசாயம் | | | | 2463 | 1780 | 683 |
| பொறியியல் | | | | 2466 | 620 | 3646 |
| ஆடை வடிவமைப்பு | | | | 164 | 109 | 55 |
| கணித விஞ்ஞானம் | | | | 2325 | 1075 | 1250 |
| சுகாதார அறிவியல் விஞ்ஞானம் | | | | 1242 | 932 | 310 |
| ஆயுர்வேத மருத்துவம் | | | | 715 | 545 | 170 |
| தொழில்நுட்பம் | | | | 3396 | 1444 | 1952 |

| தரவின் வகை | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | | | 2019 | | |
| **சுகாதாரம்** | | | | | | |
| பிறப்பு வீதம் (தலா 1000 ற்கு) மக்கள் தொகை | 17.9 | | | 15.2 | | |
| தோராயமான இறப்பு வீதம் | 6.2 | 5.3 | 7.1 | 6.6 | | |
| உயிர்ப்புள்ள பிறப்புப் பாலின விகிதம் | 1.04 | | | 1.04 | | Page \| 3 |
| மகப்பேற்று இறப்பு விகிதம் (*தலா 100, 000 உயிர்ப்பிறப்புகளுக்கு இறப்பு*) மாவட்ட ரீதியாக | 30 | | | 36 | | |
| குழந்தை இறப்பு வீதம் | 7 | 6.7 | 8.2 | 6.1 | 5.9 | 6.6 |
| தேர்ச்சி பெற்ற சுகாதாரப் பணியாளர் பங்கெடுத்த பிறப்பு | 99.5 | | | 99.5 (2016) | | |
| நிறுவன மகப்பேறுகளின் சதவீதம் | 99.9% | | | 99.9% | | |
| பதிவு செய்யப்பட்ட பதின்வயது கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம் | 5.25 | | | 4.4 | | |
| பிறப்பிற்கு முந்தைய பராமரிப்பு குறைந்தது ஒரு முறையாவது | 98.8 % | | | 98.80% | | |
| குழந்தை இறப்பு (தலா 1000 உயிருள்ள பிறப்புகளுக்கு) | 9.16 | | | 10.1 | | |
| கருவுறுதல் வீதம் [3xxiv] | 2.1 | | | 2.2 | | |
| பதின்மவயது பிறப்பு வீதம் (15-19 வயதிற்குட்பட்ட தலா 1000 பெண்களுக்கு பிறப்பு வீதம்) | 14.8 | | | 20.9 | | |
| கருத்தடை உபயோகப் பரவல் (15-49 வயதிற்குட்பட்ட பெண்களின் %) | 64.6 | | | 61.7 | | |
| தோராயமான இறப்பு வீதம் | 6.2 | 5.3 | 7.1 | 6.6 | | 7.6 |
| **பெண்கள் வலுவூட்டல்** | | | | | | |
| பாராளுமன்றத்தில் பெண்களுக்கான ஆசனங்கள் | 4.9% | | | 5.30% | | |
| உள்ளூராட்சி அரசாங்கங்களில் ஆசனங்களின் பங்கு | | | | 10.9 | | |
| பெண் சட்டமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் முகாமையாளர்கள் | | | | 28.4 | | |
| அரச பாடசாலைகளின் பெண் அதிபர்கள் (2017)<br>தேசிய பாடசாலைகள்<br>மாகாண பாடசாலைகள் | 28.5%<br>21.9% | | | | | |
| பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் | | 9.3 % | 90.70% | | | |
| உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் (2018) | | 32.30% | 67.80% | | | |
| கட்டாய ஊதியத்துடன் கூடிய மகப்பேற்று விடுமுறை | | | | 118 days[xxv] | | |

| தரவின் வகை | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் | ஒட்டுமொத்த /மொத்த | பெண் | ஆண் |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | | | 2019 | | |
| நிதி நிறுவனங்கள் அல்லது மொபைல் பண சேவை வழங்குநரிடம் கணக்கு வைத்திருக்கும் பெண்கள் (15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதையுடைய பெண்களின் சனத்தொகை %) [xxvi] | | | | 73.4 | | |
| STEM பட்டதாரிகளின் பங்கு [xxvii] | | | | 40.6% | | |
| 18 வயதிற்குள் திருமணம் செய்து கொண்ட பெண்கள் [xviii] | | | | 10% | | |

**பாலின அடிப்படையிலான வன்முறை**

2019 ஆம் ஆண்டில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட "பெண்கள் நல்வாழ்வு தேசிய ஆய்வு" பின்வரும் தரவுகளைக் கொண்டுள்ளது:

- எப்போதும் துணையுடன் வாழும் பெண்கள் பின்வரும் வீதங்களில் முறைமுறைகளை அனுபவித்துள்ளனர்:
  - உடலியல் வன்முறை 18.9%
  - பாலியல் வன்முறை 6.8%
  - உளவியல் வன்முறை 27.9%
  - பொருளாதார வன்முறை 18.1% ஆகும்.
- **இலங்கைப் பெண்களில் ஐந்தில் ஒருவர் தனது வாழ்நாளில் வன்முறையின் ஒன்றுக்கும் அதிகமான வடிவத்தை அனுபவித்துள்ளனர்.**
- 19.1% பெண்கள் தங்கள் நடத்தையைக் கட்டுப்படுத்துவதை அனுபவித்தனர்
- இளவயதுப் பெண்களிடையே அனைத்து வடிவிலான வன்முறைகளும் அதிகளவில் காணப்பட்டன.
- வன்முறைகளை அனுபவித்த 14.6% பெண்கள் தற்கொலைக்கு முயற்சித்தனர்.
- வன்முறைகளை அனுபவித்த பெண்களின் குழந்தைகள், 4.5% குழந்தைகள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகினர், 21.2% கெட்ட கனவுகள் தொடர்பில் முறையிட்டனர்.
- பெருந்தோட்டத் துறையில் SGBV – 37.9%, கிராமப்புறத் துறை – 18.6%, நகர்ப்புறத் துறை – 15.7%
- ஆண்கள் தங்களை உயர்ந்தவர்களாகக் காட்ட விரும்புகின்றனர் என 47.5% பெண்கள் கூறினர்
- பெண்கள் ஆண்களுடன் முரண்பட்டாலும் கூட அவர்களை மதிக்க வேண்டும் என ஆண்கள் எதிர்பார்க்கின்றனர் 46.5% பெண்கள் கூறினர்.
- பெண்கள் தங்களுக்கு உடன்பாடில்லை என்றாலும் கூட உடலுறவு கொள்ள வேண்டும் என்று 39.5% பெண்கள் கூறினர்
- வலுவான ஆபத்துக்கள் – குடி போதையிலுள்ள கணவர், ஏனைய ஆண்களுடன் சண்டையிடும் ஆண்கள், திருமணத்திற்குப் புறம்பான உறவுகளைக் கொண்டிருக்கும் ஆண்கள்



**இணைப்பு II**

**பாலினத்திற்கு பதிலளிக்கக் கூடிய வரவு செலவுத் திட்டத்தில் உள்ள முக்கிய பகுதிகள் (2022 வரவு செலவுத் திட்டத்திற்கான அழைப்பு குறித்து பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் 01/2021 சுற்றுநிருபத்தின் இணைப்பு)**

**பொருத்தமான அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களில் வருடாந்த செயற்றிட்டங்களுக்காக முன்மொழியப்பட்ட பகுதிகள்**

**பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் பொருளாதார வலுவூட்டல்**

குறிக்கோள் – அபிவிருத்தித் திட்டங்களில் பெண்களின் பங்களிப்பைப் பயன்படுத்துதல் மற்றும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியிற் பங்குபற்றக் கூடிய பெண்களின் சமுதாயம் ஒன்றை உருவாக்குதல்.

| மூலோபாயம் | செயற்பாடு |
|---|---|
| 1 அரசியல் வாழ்க்கையில் முடிவெடுக்கும் அனைத்து நிலைகளிலும் பெண்களின் முழுமையான மற்றும் பயனுள்ள பங்கேற்பையும் மற்றும் தலைமைத்துவத்திற்கான சம வாய்ப்புகளையும் உறுதி செய்தல் | I. உள்ளூராட்சி அதிகார சபைகளில் பெண்களுக்கு ஏற்கனவே உள்ள பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டு முறையை மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றம் ஆகிய இரண்டிற்கும் விரிவுபடுத்துதல்<br>II. வரவிருக்கும் மாகாணத் தேர்தலில் போட்டியிடும் பெண் போட்டியாளருக்கு ஆதரவளிப்பதற்கும் திறனை வளர்ப்பதற்கும் தனியான வரவு செலவுத் திட்டத்தை ஒதுக்கீடு செய்தல்<br>III. திறன் மேம்பாட்டின் மூலம் அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதலில் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களின் செயலூக்கமான மற்றும் ஆக்கப்பூர்வமான ஈடுபாட்டை செயற்படுத்துதல் |
| 2 பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் ஆக்கபூர்வமான பங்கேற்பை இலகுபடுத்துதல் | தொழிலாளர் படையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு குழந்தைகள் பராமரிப்பு வசதிகளை அமைத்தல், ஒழுங்குபடுத்துதல், தரப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல். இளம் தாய்மார்களுக்கான நெகிழ்திறன் மிக்க பணி ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல். |

| அடையாளப்படுத்தப்பட்ட செயற்றிறன் சுட்டி | நிலையான அபிவிருத்தி சுட்டி | அமைச்சு / இராஜாங்க அமைச்சு |
|---|---|---|
| I. பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் பெண் உறுப்பினர்களின் சதவீதம்<br><br>II. வரவிருக்கும் தேர்தலில் போட்டியிடும் திறன் மிக்க பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை<br><br>III. அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலில் பங்களிப்பை வழங்கிய பெண் உறுப்பினர்களின் சதவீதம் | 5.5.1. தேசிய பாராளுமன்றம், மாகாணம் மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் பெண்கள் வகிக்கும் ஆசனங்களின் விகிதம்.<br><br>5.5.2. நிர்வாகப் பதவிகளில் பெண்களின் விகிதம் | 1. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு<br>2. பெண்கள் மீதான தேசியக் குழு<br>3. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு<br>4. இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு |
| IV. நெகிழ்திறன் மிக்க பணி ஏற்பாடுகளைக் கொண்ட பகல்-நேர பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை மற்றும் அமைச்சுக்கள்/ நிறுவனங்களின் எண்ணிக்கை | 8.5.2 – பாலினம், வயது, இயலாமை உடைய நபர்களின் அடிப்படையில் வேலைவாய்ப்பின்மை வீதம்<br>5.5.2 – நிர்வாகப் பதவிகளில் பெண்களின் வீதம் | 1. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு<br>2. தொழில் அமைச்சு |

| மூலோபாயம் | செயற்பாடு |
| --- | --- |
| | |
| 3 உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் பெண்களின் தொழில் முனைவாக்கம் மற்றும் பெண்களின் சுறுசுறுப்பான ஈடுபாட்டை ஊக்குவிப்பதை உறுதி செய்தல் | I. உற்பத்திக் கூட்டுறவுகளின் ஊடாக இளம் மற்றும் பெண்களின் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துதல்<br>II. கைத்தறிகள், ஆடைகள், கொக்கிப்பின்னல் வேலை, சரிகை, பிரம்பு, மட்பாண்டங்கள், கயிறுபின்னல், கருவாடு மற்றும் மீன்வளம் தொடர்பான சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களில் பெண் தொழில்முனைவோர்கள் ஈடுபடுவதற்கான அரசு-ஆதரவுப் பொறிமுறைகளை உருவாக்குதல்<br><br>III. இளவயது ஆண் மற்றும் பெண் தொழில் முனைவோர்களுக்கு ஏற்றுமதி சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதற்கான விரிவான வாய்ப்புக்கள் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்குதல்<br><br>IV. கிராமப்புறப் பெண்களுக்கு தேவையான உதவிகளுடன் கூடிய வீட்டு அடிப்படையிலான வர்த்தகங்களை அறிமுகப்படுத்துதல் |

| அடையாளப்படுத்தப்பட்ட செயற்றிறன் சுட்டி | நிலையான அபிவிருத்தி சுட்டி | அமைச்சு / இராஜாங்க அமைச்சு |
| --- | --- | --- |
| V. பல அபிவிருத்தித் துறைகளின் கீழுள்ள தொழிலாளர் படையில் பெண்களின் பங்களிப்பின் அதிகரிப்பு சதவீதம் | 5.4.1 – பாலினம், வயது, மற்றும் இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊதியமற்ற வீட்டு மற்றும் பராமரிப்பு வேலைகளில் செலவிடப்பட்ட நேரத்தின் விகிதம். | |
| I. சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களில் ஈடுபடும் பெண்களின் அதிகரிப்பு சதவீதம்<br>II. தொழில்முனை-வோர்களினால் அணுகப்பட்ட புதிய சந்தைகளின் எண்ணிக்கை<br>III. வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்ட விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சார்ந்ததல்லாத உற்பத்திப் பொருட்களின் அதிகரிப்பு சதவீதம்<br>IV. உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவு வர்த்தகங்களில் இளவயது ஆண் மற்றும் பெண் தொழில்முனைவோர்களின் சதவீதம்.<br>V. ஏற்றுமதி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவு வர்த்தகங்களில் இளவயது ஆண் மற்றும் பெண் தொழில்முனைவோர்களின் சதவீதம்.<br>VI. வீட்டு அடிப்படையிலான தொழில்களிலிருந்து கிராமப்புற சமுதாயங்களின் குடும்ப வருமானத்தின் அதிகரிப்பு சதவீதம் | 10.2.1 – பாலினம், வயது, மற்றும் இயலாமை உடைய நபர்களின் அடிப்படையில் சராசரி வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவான வருமானத்தில் வாழும் மக்களின் விகிதம்<br>8.5.1 – தொழில், வயது,மற்றும் இயலாமை உடைய நபர்களின் அடிப்படையில் ஆண் மற்றும் பெண் ஊழியர்களின் சராசரி ஒரு மணிநேர வருவாய்<br>8.3.1 – பாலினத்தின் அடிப்படையில் விவசாயம் அல்லாத வேலைவாய்ப்புக்களில் உள்ள முறை-சாரா வேலைவாய்ப்புக்களின் விகிதம்<br>2.3.2 – பாலினம் மற்றும் பூர்வீக அந்தஸ்தின் அடிப்படையில் சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் சராசரி வருமானம் | 1. சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு<br>2. நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழிநுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு<br>3. உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு<br>4. கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால், முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சு<br>5. அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு<br>6. தென்னை, கித்துல், பனை மற்றும் இறப்பர் செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு |

| மூலோபாயம் | செயற்பாடு |
|---|---|
| | |
| 4 கரிம வேளாண்மையை ஊக்குவித்தல் மற்றும் பிரபலப்படுத்துதல் | I. சேதன உரத்தைப் பயன்படுத்தி 2 மில்லியன் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல்<br><br>II. முறையான கழிவு முகாமைத்துவ முறைமை ஒன்றை உருவாக்குதல் மற்றும் சேதன உரத்தை உற்பத்தி செய்தல்.<br><br>III. இளைஞர்களின் விவசாயத் தொழில்முனைவாக்கத்தை கட்டியெழுப்புதல்<br><br>IV. “சிதமு” மகளிர் உழவர் சங்கங்களுக்கு சேதன உரத்தை வணிக முயற்சியாக உற்பத்தி செய்வதற்கு இலகுபடுத்துதல். |

| அடையாளப்படுத்தப்பட்ட செயற்றிறன் சுட்டி | நிலையான அபிவிருத்தி சுட்டி | அமைச்சு / இராஜாங்க அமைச்சு |
|---|---|---|
| | | 7. கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்டப் பயிற்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு<br>8. கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு<br>9. பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு<br>10. இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு<br>11. பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு |
| I. சேதன உரத்தைப் பயன்படுத்தும் வீட்டுத் தோட்டங்களின் அதிகரிப்பு சதவீதம் கரிம வேளாண்மையில் பெண்களின் அதிகரிப்பு சதவீதம்<br>II. முறையான கழிவு முகாமைத்துவ முறைமை ஊடாக தேசன உர உற்பத்தியில் ஈடுபடும் பெண்களின் சதவீதம்<br>III. வருமானம் ஈட்டக்கூடிய பயிர்ச்செய்கைகளில் ஈடுபடும் இளம் தொழில்முனை-வாக்கர்களின் எண்ணிக்கை<br>IV. சேதன உரத்தை உற்பத்தி செய்வதற்காக ஆதரவு வழங்கப்பட்ட “சிதமு” பெண்கள் சமூகங்களின் எண்ணிக்கை | 2.3.2 – பாலினம் மற்றும் பூர்வீக அந்தஸ்தின் அடிப்படையில் சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் சராசரி வருமானம்<br>2.1.2 – உணவுப் பாதுகாப்பின்மை அனுபவ அளவின் அடிப்படையில் (Food Insecurity Experience Scale-FIES) சனத்தொகையில் காணப்படும் ஓரளவான அல்லது தீவிரமான உணவுப் பாதுகாப்பின்மை.<br>2.2.2 – 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு (உயரத்திற்கான எடை >+2 அல்லது <-2 | 1. நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழிநுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு<br>2. உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு<br>3. கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால், முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சு |

| மூலோபாயம் | செயற்பாடு |
|---|---|
| | |
